வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 19.03.2025 புதன்கிழமை இதழ் : 80 பக்கங்கள் : 12

### வனவளம், வன ஜீவராசிகள் திணைக்களங்களால்
# வடக்கு மாகாணத்தில் அதிகூடிய பாதிப்புகள்
## ஆளுநர் வேதநாயகன்



யாழ்ப்பாணம், மார்ச்19

**வனவளத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களத்தால் வடக்கு மாகாணத்தில் அதிகூடிய பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன என்று வடக்கு ஆளுநர் நா. வேதநாயகன் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

நேற்றைய தினம் ஆளுநர் செயலகத்தில் நேற்றைய தினம் வடக்கு மாகாணத்துக்கு பல்வேறு வகையிலும் ஒதுக்கப்பட்டுள்ள நிதியை வினைத்திறனாகவும் - ஒருங்கிணைந்தும் - விரைவாகவும் பயன்படுத்துவது தொடர்பில் நடத்தப்பட்ட கலந்துரையாடலில் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது, வனவளத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களத்தால் நாட்டின் பல்வேறு பிரதேசங்களுக்கும் பாதிப்பு இருந்தாலும் வடக்கு மாகாணத்தில் அதிகூடிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மக்களின் மீள்குடியமர்வு, விவசாயம், அபிவிருத்தி உள்ளிட்ட பல் வேறு விடயங்களுக்கு இடையூறாக இந்த இரு திணைக்களங்களின் செயல்பாடுகள் அமைந்திருக்கின்றன - என்றும் அவர் குற்றஞ்சாட்டியிருந்தார். (ஐ-02-05)

(மற்றொரு செய்தி பக்கம் 2இல்)

## தென்னக்கோன் மட்டுமல்ல மேலும் பலர் கைதாவார்கள்
### அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 19

முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மாத்திரமல்ல, தேடப்பட்டு வரும் மேலும் பல சந்தேகநபர்கள் விரைவில் கைது செய்யப்படுவார்கள் என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் நேற்றைய சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மாத்திரமல்ல, கணேமுல்லை

11

## கோட்டாபயவின் தடுப்புகாவல் உத்தரவு சட்டவிரோதமானது!
### உயர் நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, மார்ச் 19

பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 2020ஆம் ஆண்டு பிறப்பித்த தடுப்புக் காவல் உத்தரவு சட்டவிரோதமானது என்று உயர்நீதிமன்றம் நேற்று செவ்வாய்க் கிழமை தீர்ப்பு அளித்துள்ளது.

ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட பெண் ஒருவரின்

11

### பட்டலந்த அறிக்கை விவகாரம்
## சட்ட நடவடிக்கையை அரசு தீர்மானிக்காது!

கொழும்பு, மார்ச் 19

பட்டலந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கையை அரசாங்கம் தீர்மானிக்கப் போவதில்லை. மாறாக சட்ட அமுலாக்க நிறுவனங்களே அதனைத் தீர்மானிக்கும் என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

"பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் எடுக்கவுள்ள நடவடிக்கைகள் குறித்து பாராளுமன்றத்தில் தெளிவாகத் தெரிவித்திருக்கிறோம்.

11

## உடுப்பிட்டியில் சடலம் மீட்பு!

வடமராட்சி, மார்ச்19

உடுப்பிட்டியில் வெற்றுக் காணியிலிருந்து சடலம் ஒன்று நேற்று செவ்வாய்க் கிழமை மாலை மீட்கப் பட்டது.

உடுப்பிட்டி - தொண்டைமானாறு பொறுக்கி - ஆலடி பகுதியிலுள்ள காணி ஒன்றிலிருந்தே இந்த

11

## ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர்!
### அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 19

பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் ஆதங்கம் நியாயமானது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய சூத்திரதாரிகள் விரைவில் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் நேற்றைய ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் அறிவிப்பை எதிர்மறையான விடயமாக நாம் பார்க்கவில்லை. அவரால் தெரிவிக்கப்படும் விடயங்கள் நியாயமானவையாகும். எந்தவொரு பிரச்னையின் போதும் பாதிக்கப்பட்ட சமூகத்தினர் மனதளவில் பெரும் துயரத்தை எதிர் கொள்ள

11

### லலித், குகன் வழக்கு:
## கோட்டாபயவுக்கான அழைப்பாணை இரத்தைப் பரிசீலிக்குமாறு உத்தரவு
### உயர்நீதிமன்றம் நேற்று விதித்தது

கொழும்பு, மார்ச் 19

லலித், குகன் காணாமல் ஆக்கப்பட்ட வழக்கில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவுக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற வழங்கிய அழைப்பாணையை இரத்து செய்து மேன் முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை எதிர் வரும் ஜூலை 30ஆம் திகதி பரிசீலிக்குமாறு உயர்நீதிமன்றம் மேன் முறையீட்டு நீதிமன்றத்துக்கு நேற்று செவ்வாய்க்கிழமை

11

## அர்ச்சுனா எம்.பி. மீது நடவடிக்கை எடுபடும்

கொழும்பு, மார்ச் 19

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கு எதிராக சபாநாயகர் சில நடவடிக்கைகளை எடுப்பார் என்று அரசாங்கம் எதிர்பார்ப்பதாக அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ நேற்று தெரிவித்தார்.

நேற்றைய தினம் ஊடக சந்திப்பில் கேள்வி

11

## பால்மா விலை ரூ. 50ஆல் உயரும்!

கொழும்பு, மார்ச் 19

எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும்வகையில் இறக்குமதியாகும் பால் மாவின் விலையை 50 ரூபாயால் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒரு வருட காலப்பகுதியில் சர்வதேச சந்தையில் பால் மாவின் விலை 20 வீதமாக அதிகரிப்பட்டது. இதை அடிப்படையாகக் கொண்டு இறக்குமதியாகும் பால்மா பொருட்களின் விலையை 4.7 வீதம் அதிகரிப்பதற்கு இறக்குமதியாளர்கள் எடுத்த தீர்மானத்தின் படியே

11

## தையிட்டி திஸ்ஸ விகாரையை அகற்ற கோருவோரிடம் போலி ஆவணங்களாம்!
### சிறீ லங்கா பெரமுன கட்சி சொல்கிறது

கொழும்பு, மார்ச் 19

தையிட்டி திஸ்ஸ விகாரையின் அண்மையிலுள்ள காணிகளை உரிமை கோருவதற்காக போலியான ஆவணங்களுடன் போராட்டங்களில் ஈடுபடுகின்றனர் என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

அத்துடன், வடக்கு மாகாணத்தில் 600 இடங்கள் தொல்பொருள் மையங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த இடங்களை வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரித்து

11

## 19 சுகாதார தொழிற்சங்கங்கள் நேற்று அடையாள வேலைநிறுத்தம்!
### ஆயிரக்கணக்கான நோயாளர்கள் சிரமம்

யாழ்ப்பாணம், மார்ச் 19

வரவு - செலவுத் திட்டத்தில் தமக்கான கொடுப்பனவு குறைக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து 19 சுகாதார தொழிற்சங்கங்கள் நேற்று செவ்வாய்க்கிழமை காலை முதல் 24 மணி நேர வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன.

இன்று புதன்கிழமை காலை 7 மணி வரை வேலை நிறுத்தம் தொடர்ந்தாலும், அத்தியாவசிய மற்றும் அவசர சேவைகள் தொடர்ந்து

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்குக்கு ஒதுக்கப்பட்ட நிதியை முறையாக பயன்படுத்த ஆராய்வு

## அமைச்சர், ஆளுநர் தலைமையில் நடந்தது



யாழ்ப்பாணம், மார்ச் 19

வடக்கு மாகாணத்துக்கு அதிகளவான நிதி பல்வேறு வகையிலும் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் அவற்றை வினைத் திறனாகவும் - ஒருங்கிணைந் தும் - விரைவாகவும் நிறை வேற்றுவது தொடர்பாக கடற் றொழில் மற்றும் நீரியல்வளத் துறை அமைச்சர் இ. சந்திர சேகரன் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாய கன் ஆகியோர் தலைமையில் நேற்று விசேட கூட்டம் நடை பெற்றது.

ஆளுநரின் செயலகத்தில் நடந்த இந்தக் கூட்டத்தின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர்,

வடக்கு மாகாணம் கால் நடை உற்பத்தித் துறையில் மிகச் சிறந்த நிலையில் உள்ள போதும் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகள் இல்லா மல் இருப்பது பெரும் பின்ன டைவு. சட்டவிரோதமான மணல் அகழ்வு மிகப்பெரிய பிரச்னையாகவுள்ளது.

வடக்கு மாகாணத்தில் ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப் படவேண்டும் என்றும், ஆளணி கள் மீளாய்வு செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவித்த ஆளுநர் இது தொடர்பில் அமைச்சர் மற்றும் பாராளு மன்ற உறுப்பினர்களும் ஜனா திபதியின் கவனத்துக்கு கொண்டு செல்லவேண்டும் எனவும் தெரி வித்தார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த அமைச்சர் இ. சந்திர சேகரன், மாகாண சபைக்கு அதிகளவான நிதி ஒதுக்கப்பட் டுள்ள நிலையில், அனைத்துத் திணைக்களங்களும் ஒருங்கி ணைந்து இதைச் செலவு செய்ய வேண்டும்.

மேலும், வெளிநாடுகளிலி ருந்து முதலீட்டாளர்கள் அதிக ளவில் வருகைதரும் நிலையில் அவர்களுக்கு ஒத்துழைப் புக்களை அதிகாரிகள் வழங்க வேண்டும் எனவும் ஆலோ சனை வழங்கினார்.

வடக்கு மாகாண பிரதம செயலாளர், மாகாணத்துக்கான நிதி மூலங்கள் அதற்கான அனு மதிக்கான நடைமுறைகள் தொடர்பில் விரிவாகக் கூறிய துடன் இந்த ஆண்டு மாகாண சபைக்கு 732. 8 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், தமது அமைச்சு மற்றும் திணைக் களங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி தொடர்பாகவும் முன்னெ டுக்கப்படவுள்ள வேலைகள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தி னார். இதன் பின்னர் கல்வித் துறையிலுள்ள பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப் பட்டது.

இதன்போது யாழ்ப்பாணத் திலிருந்து வெளிமாவட்டங் களுக்கு இடமாற்றம் வழங்கப் பட்டுள்ள ஆசிரியர்களில் அரைசேர் மேன்முறையீடு செய் துள்ளதாக ஆளுநர் மற்றும் அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு வந்தார். இதன்போது ஆளுநரும், அமைச்சரும் இரு விடயங்களைச் சுட்டிக்காட் டினர்.

ஒருபோதும் வெளிமாவட் டங்களில் பணியாற்றாதவர்கள் வெளிமாவட்டங்களுக்குச் செல்லத்தான் வேண்டும் எனவும், அத்துடன் மேன் முறையீடுகளை ஒவ்வொன்றாக ஆழமாக ஆராயுமாறும் குறிப் பிட்டனர்.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலர் அதன் பின்னர் தமது அமைச்சு, திணைக்களங்களுக்கான ஒதுக் கீடுகள் தொடர்பில் விளக்கம ளித்தார். (ஐ-05 -02)



# முழுநேர சந்தையாக மாற்றப்பட்ட கோவிற்சந்தை நாளை திறப்புவிழா

வடமராட்சி, மார்ச் 19

வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச சபையும் கோவிற்சந்தை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கமும் கரவெட்டி மக்களும் இணைந்த நிதிப் பங்க ளிப்புடன் புனரமைக்கப்பட்ட கோவிற்சந்தை மக்களின் பயன் பாட்டுக்குக் கையளிக்கும் நிகழ்வு நாளை வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு வடம ராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை செயலாளர் கணேசன் கம்லநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

குறித்த நிகழ்வில், முதன்மை விருந்தினராக வட மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாய கன், சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண பிரதம செயலா ளர் இலட்சுமணன் இளங் கோவன், வட மாகாண உள்ளூ ராட்சி அமைச்சின் செயலாளர் செல்லத்துரை பிரணவநாதன், வட மாகாண உள்ளூராட்சி திணைக்கள ஆணையாளர் திருமதி தேவநந்தினி பாபு, வட மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள ஆணையாளர் நட ராஜா திருலிங்கநாதன், கர வெட்டி பிரதேச செயலாளர் திருமதி உமாமகள் மணிவண் ணன், யாழ். பிராந்திய உள்ளூ ராட்சி உதவி ஆணையாளர் பொன்னம்பலம் சிறிவர்ணன், கரவெட்டி சுகாதார மருத்துவ பணிமனையின் சுகாதார மருத் துவ அதிகாரி திருமதி பிருந் திகா செந்தூரன்,

கௌரவ விருந்தினர்களாக கோவிற்சந்தை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க தலைவர் சட்டத்தரணி கந்தசாமி மகிந்த ன், கோவிற்சந்தை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் ஆலோ சகர் சிவராமலிங்கம் சரவண குமரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கரவெட்டியின் அடையாள மான மாலை நேர சந்தையாக அறியப்பட்ட கோவிற்சந்தை மக்களின் பங்கேற்புடன் மீண் டும் புனரமைக்கப்பட்டு புதுப் பொலிவுடன் முழுநேர சந்தை யாக இயங்கவுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ஐ- 02)

# விசேட சிகிச்சை நிலையங்களை இயக்குவது குறித்து உரையாடல்!

வடமராட்சி, மார்ச் 19

நெதர்லாந்து அரசாங்கத் தின் நிதியுதவியுடன் வடக்கில் அமைக்கப்பட்டுள்ள 4 சிகிச்சை நிலையங்களின் செயல்பாடுக ளையும் வினைத்திறனுடன் இயங்கவைப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயும் கலந்து ரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தலை மையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் திங்கட் கிழமை நடைபெற்றது.

பருத்தித்துறை ஆதார மருத் துவமனை, கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை, மாங் குளம் ஆதார மருத்துவமனை, வவு னியா மாவட்ட மருத்துவமனை ஆகியவற்றிலேயே இந்த விசேட சிகிச்சை நிலையங்கள் அமைக் கப்பட்டுள்ளன.

இவை கடந்த காலங்களில் திறந்து வைக்கப்பட்டாலும் அவற்றின் தேவைப்பாடுகள் முழுமைப்படுத்தப்படாமை யால் வினைத்திறனுடன் செயல் படமுடியாத நிலைமை காணப் படுகின்றது. ஆளணி பற்றாக் குறை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் சவாலாக இருப் பதாகச் சுட்டிக்காட்டப்பட்டது டன் அவற்றை எவ்வாறு தீர்த்து இவற்றை இயங்க வைக்கலாம் என்பது தொடர்பில் ஆராயப் பட்டது.

இதேபோன்று, யாழ்ப்பா ணம் போதனா மருத்துவமனை யின் தேவைப்பாடுகள் தொடர் பாகவும் கலந்துரையாடப்பட் டது. 3 தசாப்தங்களாக வடக்கு மாகாணத்தில் சுகாதாரத்து றையில் ஆளணி மறுசீரமைப்பு நடைபெறவில்லை என்றும் இதனைக் கருத்தில்கொண்டு ஆளணி மறுசீரமைப்பு, வெற்றி டமாகவுள்ள ஆளணிகளை நிரப்புவதற்கு மத்திய சுகாதார அமைச்சைக் கோருவதற்கும் இந்தக் கலந்துரையாடலில் முடிவு செய்யப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட மருத் துவமனையிலுள்ள பெண்கள் சுகாதார பராமரிப்புக்கான சிறப்பு சிகிச்சை நிலையத்தை இயங்கச் செய்வதற்கான நிதிக் கான வாய்ப்புகளை எவ்வாறு உருவாக்கிக்கொள்வது என்பது தொடர்பாகவும் கலந்துரையா டப்பட்டது. (ஐ-02-05)

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வவுனியாவில் வேட்புமனு தாக்கல்



வவுனியா, மார்ச் 19

நடைபெறவுள்ள உள்ளூ ராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனது வேட்புமனுவை நேற்று வவுனி யாவில் தாக்கல் செய்தது.

உள்ளூராட்சி சபைத் தேர்த லுக்கான வேட்புமனுக்களை ஏற்கும் செயல்பாடு நேற்று ஆரம்பமானது.

இதன்படி, வவுனியா வடக்கு பிரதேச சபையில் போட்டியிடு வதற்கான வேட்புமனுவை அகில இலங்கை தமிழ் காங்கி ரஸ் கட்சியில் போட்டியிடும் தமிழ்த் தேசிய மக்கள் முன் னணி நேற்று தாக்கல் செய்தது.

அந்தக் கட்சியின் முக்கியஸ் தர் எஸ். தவபாலன் தலைமை யில், வேட்பாளர்கள் சகிதம் ஆதர வாளர்கள் சகிதம் தமது வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் உள்ள நான்கு உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடுவதற் காக காங்கிரஸ் கட்சி கட்டுப் பணம் செலுத்தியுள்ளது என் பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 3 இந்திய மீனவர்கள் நெடுந்தீவில் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 19

நெடுந்தீவு கடலில் அத்து மீறி மீன்பிடித்த 3 இந்திய மீனவர் கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு கைது செய்யப்பட்ட இவர்கள் மூவரும் அவர்களின் படகுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இந் திய மீனவர்கள் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டனர். இவர்கள் சட்ட நடவடிக்கைக்காக மயிலிட்டி நீரியல் வளங்கள் திணைக்களத் திடம் ஒப்படைக்கப்பட் டுள்ளனர். (ஐ)

# காணாமல்போன மீனவரை தேடும் நடவடிக்கை தீவிரம்!

யாழ்ப்பாணம், மார்ச் 19

கடற்றொழிலுக்கு சென்ற நிலையில் காணாமல்போன குரு நகரை சேர்ந்த இரு மீனவர்க ளையும் தேடும் நடவடிக்கை துரித கதியில் முன்னெடுக்கப் பட்டு வருவதாக கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த மீனவர்கள் காணா மல்போயுள்ள விடயம் தொடர் பில் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டதையடுத்து கடற் படையினர் மற்றும் சம்பந்தப் பட்ட திணைக்கள பிரதானிக ளுடன் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச் சர் இராமலிங்கம் சந்திரசேகர் அவசர கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளார்.

மீனவர்கள் தொடர்பில் தேடுதல் நடவடிக்கையை உடன் ஆரம்பிக்குமாறு ஆலோசனை வழங்கினார். இதற்கமைய தேடுதல் நடவடிக்கை இடம் பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடற்றொழிலுக்கு சென்ற விமலேந்திரன் ஞானராஜ் (வயது 46) பூலோகதாசன் (வயது 54) ஆகியோரே கடந்த 15ஆம் திகதி முதல் காணாமல் போயினர் என்பது குறிப்பிடத் தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

Eelanadu

19.03.2025 புதன்கிழமை

பிலவ வருடம், பங்குனி 05

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

தொலைபேசி : 021 205 2300

## ரணிலின் மேற்குலக முகம் தகர்கிறதா?

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கு சார்பானவர் என்பதே இதுவரையான பார்வை. மேற்கு சார்பானவர் என்னும் அடையாளம் அடிப்படையில் மேற்குலக அரசியல் நிலைப்பாடுகள், சிந்தனைகளுக்கான சார்பு நிலை என்னும் பொருளைக் கொண்டதாகும். இதே போன்று, மேற்குலகால் முன்வைக்கப்படும் தாராளவாத விழுமியங்களை கடைப்பிடிப்பதில் அர்ப்பணிப்பைக் காண்பிக்கக் கூடியவர் என்னும் ஒரு பார்வையும் உண்டு. அவ்வாறான பார்வையின் ஊடாகவே ரணில் விக்கிரமசிங்க இதுவரையில் நோக்கப்பட்டிருக்கிறார். ஆனால், தற்போது பட்டலந்த சித்திரவதை மற்றும் படுகொலைகள் தொடர்பான விவகாரத்தில் ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தொடர்பிருப்பதாகக் கூறப்படும் விவகாரம் பிரதான பேசுபொருளாக மாறியிருக்கிறது.

இந்த நிலையில் இதுவரையில் ரணில் தொடர்பில் சர்வதேச அரங்குகளில் காணப்பட்ட பார்வையிலும் இது கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தும் விடயமாக மாறியிருக்கிறது. ரணில் தேர்தலில் தோல்வியடைந்திருந்தாலும்கூட உலகளவில் மதிக்கப்படக்கூடிய இலங்கை அரசியல்வாதி என்னும் தகுதியுடன் இருந்தார். தொடர்ந்தும் சர்வதேச அரங்குகளில் பேசி வந்தார். அவருக்குள்ள சர்வதேச அங்கீகாரமே அவ்வாறான இடத்தை வழங்கியிருந்தது. ஆனால், தற்போது பல்லாயிரக் கணக்கான சிங்கள இளைஞர், யுவதிகளின் கொலையுடன் ரணிலுக்கு தொடர்பிருப்பதான குற்றச்சாட்டும் - அதனைத் தொடர்ந்து எழுந்திருக்கும் விமர்சனங்களும் ரணிலின் அரசியல் வாழ்வில் இதுவரையில் ஏற்பட்டிராத நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கிறது.

ஆனால், இது ரணில் விடயமா அல்லது அவர் சார்ந்திருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் கால விடயமா? ஏனெனில் பட்டலந்த விவகாரத்தின்போது அதிகாரத்தில் இருந்தவர் ரணசிங்க பிரேமதாஸ. அவரது உத்தரவுகளை நிறைவேற்றும் ஒருவராகவே ரணில் இருந்திருக்க முடியும் - அப்படிப் பார்த்தால் ஐக்கிய தேசியக் கட்சியில் அப்போது தீர்மானம் எடுக்கும் இடத்திலிருந்தவர்கள் அனைவரின் மீதும் விசாரணகள் விரிய வேண்டும்.

ஜே. வி. பி. இரண்டு தடவைகள் ஆயுதக் கிளர்ச்சி மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு முயற்சி மேற்கொண்ட ஓர் அரச கவிழ்ப்பு இயக்கம். அந்த இயக்கத்தை அழித்தொழிக்கும் செயல்பாடுகளை முதலில் சிறிமாவோ பண்டாரநாயக்க மேற்கொண்டார். பின்னர், ரணசிங்க பிரேமதாஸ மேற்கொண்டார். இந்த நிலையில், இன்று ஜே. வி. பி. ஆட்சியிலிருக்கின்ற போது, அன்றைய சூழலில் சட்டத்துக்குப் புறம்பாக கொல்லப்பட்டவர்களுக்கான நீதியை நிலைநாட்டுமா என்னும் கேள்வியுடன்தான் இந்த விடயம் தொடர்புறுகின்றது.

நீதி நிலைநாட்டப்படுமா என்பதற்கு அப்பால் ரணில் விக்கிரமசிங்க என்னும் சர்வதேச முகமுள்ள இலங்கை அரசியல்வாதி இந்த விடயத்தில் சிக்குண்டிருப்பது, அவரது தனிப்பட்ட நன்மதிப்பு மற்றும் இதுவரையான அவரது அரசியல் வாழ்வு சோதனைக்கு உள்ளாகியுள்ளது என்பதுதான் உண்மை. ஆனால், இது மீண்டெழ முடியாத விடயம் என்றும் கூறிவிட முடியாது.

ஏனெனில், இந்த விடயங்கள் தொடர்பில் சிந்திக்கும்போது, ஒரு முக்கியமான விடயத்தை மறந்துவிடக்கூடாது. அதாவது, மேற்குலகு சார்பான கட்சியென்று வர்ணிக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் காலத்தில்தான் ஈழத் தமிழ் மக்களுக்கு எதிரான ஜூலை 83 படுகொலைகள் நிகழ்த்தப்பட்டன. அதனைத் தடுப்பதற்கு அப்போதைய ஆட்சியாளர் ஜே. ஆர். ஜெயவர்த்தன எந்தவொரு முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. இலங்கையில் இடம்பெற்ற பல்வேறு கலவரங்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் காலத்தில்தான் நிகழ்த்தப்பட்டன. ஆனால், அதன் பின்னரும் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல்வாதிகளை மேற்குலகம் வெறுக்கவில்லை. இங்கு விடயம் ஒன்றே ஒன்றுதான். அதாவது, அவர்களின் அரசியல் நலன்களுடன் நின்றால் இங்கு மனித உரிமைகள், ஜனநாயகம் என்பதெல்லாம் ஒரு விடயமல்ல என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

## அமெரிக்க விருந்தாளி நூல் அறிமுகம் சிறப்புற நடந்தது!



*யாழ்ப்பாணம், மார்ச் 19*

எழுத்தாளர் தியா காண்டீபன் எழுதிய 'அமெரிக்க விருந்தாளி' சிறுகதை நூல் அறிமுக நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை 'எங்கட புத்தகங்கள்' இல்லத்தில் நடைபெற்றது.

தலைமை உரையை சட்டத்தரணி சி. அ. யோதிலிங்கம், நூல் வெளியீட்டுரையை எழுத்தாளர் தீபச்செல்வன், விமர்சன உரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளரான புலோலியூர் வேல்நந்தன் ஆகியோர் நிகழ்த்தினார்கள். 'எங்கட புத்தகங்கள்' நிறுவுநர் குலசிங்கம் வசீகரன் புத்தகம் பற்றிய தனது வாசிப்பனுபவத்தை பகிர்ந்து கொண்டார்.

முதல் பிரதியை நூலாசிரியர் காண்டீபன் வெளியிட மன்னார் பரிகாரிக்கண்டல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் மகேஷ்வரராஜ் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து சிறப்பு பிரதிகள் வழங்கப்பட்டன. தொடர்ந்து வாசகர்களின் கருத்துப்பகிர்வும் நூலாசிரியர் தியா காண்டீபனின் ஏற்புரையும் நடைபெற்றன.

## நெல்லியடி முச்சக்கர வண்டி சங்கத்துக்கு புதிய நிர்வாகம்!



*வடமராட்சி, மார்ச் 19*

நெல்லியடி முச்சக்கர வண்டி கூட்டுறவு சங்கத்தின் 2025ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை கரவெட்டி பிரதேச சபை மண்டபத்தில் கரவெட்டி பிரதேச சபையின் செயலாளர் க. கம்சநாதன் மற்றும் கூட்டுறவுச் சங்க உத்தியோகத்தர்களான அ. தயாளன், சி. சிறீதரன் முன்னிலையில் நடைபெற்றது.

புதிய நிர்வாகத்தில் தலைவராக இராசன் விஜிதரன், செயலாளராக சிவபாலசிங்கம் ஆர்த்திகன், பொருளாளராக சிவராசா புஷ்பராசா, உபதலைவராக மாயவன் மகேஸ்வரன், உபசெயலாளராக இந்திரன் நிறோஜன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். தொடர்ந்து நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ-02)

## திருடியவருக்கு புனர்வாழ்வு

*யாழ்ப்பாணம், மார்ச் 19*

வீடு ஒன்றில் நீரிறைக்கும் மோட்டரை திருடிய போதைப்பொருளுக்கு அடிமையான நபரை விளக்கமறியலின் பின்னர் புனர்வாழ்வுக்கு உட்படுத்த மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மூளாய் - வேரம் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை வீடு ஒன்றுக்குள் புகுந்த திருடன் மோட்டரை திருடியுள்ளார்.

இந்தத் திருட்டு குறித்து வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

இது தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸார் அன்றைய தினமே 33 வயது சந்தேகநபரை கைது செய்தனர். அவரிடம் இருந்து மோட்டரும் மீட்கப்பட்டது.

சந்தேகநபர் போதைப் பொருளுக்கு அடிமையானவர் என்றும் தெரியவந்துள்ளது.

சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில் அவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறும், விளக்கமறியல் முடிவடைந்ததும் அவரைப் புனர்வாழ்வுக்கு உட்படுத்தவும் நீதிவான் உத்தரவிட்டார். (ஐ)

## மணல் கடத்தியவர் கைதானார்!

*யாழ்ப்பாணம், மார்ச் 19*


அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் சாரதியை சாவகச்சேரி பொலிஸார் நேற்று கைது செய்தனர்.

கைதடி பகுதியில் குறித்த டிப்பரை மறித்து சோதனையிட்டபோது அனுமதிப்பத்திரமின்றி மணல் கடத்தப்பட்டமை தெரிய வந்தது.

இதையடுத்து, 45 வயதான சந்தேகநபரை பொலிஸார் கைது செய்தனர்.

சந்தேகநபரை சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-05)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். தாயார் ஆதரித்து பேசுவார். மகிழ்ச்சியான நாள்.

**இடபம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். அமோகமான நாள்.

**மிதுனம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள் உறவினர்கள் மதிப்பார்கள். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**கடகம்**
எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். நன்மை கிடைக்கும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும்.

**கன்னி**
கணவன் மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். தோற்றப் பொலிவுக் கூடும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தேவையற்ற விஷயங்களை மனதில் நினைத்து குழம்பிக் கொண்டிருக்காதீர்கள். அதிகாரிகளுடன் ஈகோ பிரச்னை வந்து நீங்கும். விழிப்புணர்வு தேவைப்படும் நாள்.

**விருட்சிகம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் கரையும். உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**தனுசு**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். புது பொருள் வந்து சேரும். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி பெறும்.

**மகரம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலைக்கு தகுந்தார் போல் பொறுப்பாக இருப்பார்கள். சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். புதிய பாதை தெரியும் நாள்.


**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் இனந்தெரியாத கவலைகள் வந்து போகும். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

# சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் தாங்கி

*யாழ்ப்பாணம், மார்ச்.19*

சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்த் தாங்கி முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

மக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை வழங்கும் நோக்குடன் அமரர்களான பொன்னுபழநி, புவனேஸ்வரி தம்பதியினரின் ஞாபகார்த்தமாக அவர்களின் உறவினர்களால் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் தாங்கியை திறந்து வைத்து உரையாற்றிய டக்ளஸ் தேவானந்தா கூறுகையில்,



“சோழர் காலத்தில் அமைக்கப்பட்ட சிவன் கோவில் தீர்த்த கிணற்றிலிருந்து நீர் பெற்றுக் கொள்ளப்பட்டு சுத்திகரிக்கப்படும் குடிநீரையும், அதற்கான கட்டமைப்புக்களையும் பாதுகாத்து பயன்படுத்த வேண்டியது சாவகச்சேரி மக்களின் கடப்பாடு.

மேலும், இந்த விடயத்தை எனது கவனத்துக்கு கொண்டு வந்ததுடன் தொடர்ச்சியாக எனக்கு நினைவுபடுத்தி விடயத்தை முன்னகர்த்திய மெடிஸ்கோ, தர்சன் ஆகியோருக்கும் தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் மற்றும் நீர்த்தாங்கியை அமைத்திருக்கும் குடும்பத்தினர் ஆகியோருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்”- என்றார். (எ-05)

# யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் படுகாயம்!

*யாழ்ப்பாணம், மார்ச்.19*

யாழ்ப்பாணத்தில் நேற்றுக் காலை 08.10 மணியளவில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதி இடம்பெற்ற விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். மோட்டார் சைக்கிளில் சென்ற மற்றையவர் சிறிய காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுன்னாகம் கொமர்ஷல் வங்கிக்கு முன்பாக, தெல்லிப்பழையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த ஒரு மோட்டார் சைக்கிள் மீது அதே திசையில் வந்த இன்னொரு மோட்டார் சைக்கிள் மோதியது.

இந்த விபத்தில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். விபத்துச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)

# தமிழ் மக்கள் கூட்டணியினர் வவுனியாவில் கட்டுப்பணம்

*வவுனியா, மார்ச்.19*

வவுனியா மாவட்டத்தில் 2 உள்ளூராட்சி சபைகளில் போட்டியிட சி. வி. விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியினர் நேற்று முன்தினம் கட்டுப்பணம் செலுத்தினர்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவோர் இன்று 19 ஆம் திகதி வரை கட்டுப்பணம் செலுத்த முடியும்.

இதற்கமைவாக, வவுனியா மாவட்டத்தின் 5 உளளூராட்சி சபைகளில் வவுனியா மாநகர சபை மற்றும் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை ஆகிய இரு உள்ளூராட்சி மன்றங்களிலும் போட்டியிடுவதற்காக தமிழ் மக்கள் கூட்டணி கட்டுப்பணம் செலுத்தியது.

கட்டுப்பணத்தை கட்சியின் மாவட்ட அமைப்பாளர் தமிழகன் உள்ளிட்டவர்கள் வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல்கள் அலுவலகத்தில் செலுத்தினர். (எ-10)

# சுயேச்சை குழு கட்டுப்பணம்

*யாழ்ப்பாணம், மார்ச்.19*

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் யாழ்ப்பாணம் மாநகர சபை, கோப்பாய் பிரதேச சபை மற்றும் வேலணை பிரதேச சபை ஆகிய மூன்று சபைகளிலும் தொழிலதிபர் ஞானப்பிரகாசம் சுலக்சன் தலைமையிலான சுயேச்சை குழு போட்டியிடவுள்ளது.

இந்த நிலையில், யாழ். மாவட்ட செயலகத்தில் உள்ள தேர்தல்கள் அலுவலகத்தில் நேற்று முன்தினம் குறித்த சுயேட்சை குழு கட்டுப்பணம் செலுத்தியது. (எ-05)

# “சஜித்மீது தமிழர்களுக்கு நம்பிக்கை அதிகம்”

*யாழ்ப்பாணம், மார்ச்.19*

எமது கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸமீது தமிழ் மக்கள் கொண்ட நம்பிக்கை அதிகமாகவே உள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட பிரதான அமைப்பாளர் உமாசந்திர பிரகாஸ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள 17 உள்ளூராட்சி சபைகளிலும் போட்டியிடுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி யாழ்ப்பாணம் தேர்தல்கள் அலுவலகத்தில் நேற்று முன்தினம் கட்டுப்பணம் செலுத்தியது.

இதன்பின்னர் செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிட்ட உமாசந்திர பிரகாஸ் கூறுகையில்,

“கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கூட இங்குள்ள மக்கள் அமோக ஆதரவை வழங்கினர்.

இந்த முறை கணிசமான ஆதரவை பெறக் கூடிய நம்பிக்கையோடு இளம் வேட்பாளர்களை நிறுத்தி இத் தேர்தலில் போட்டியிடுகிறோம்.

வடக்கு - கிழக்கு, மலையகம் உள்ளடங்களாக இலங்கை முழுவதும் உள்ள சகல சபைகளிலும் நாங்கள் போட்டியிடுகின்றோம். மக்களின் ஆதரவுடன் நிச்சயம் வெற்றி பெறுவோம்”- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசியலமைப்பினை நிச்சயம் உருவாக்குவோம்!

## அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார உறுதி

கொழும்பு, மார்ச் 19

**புதிய யாப்பு உருவாக்கத்துக்கான பணிகளை புதிதாக ஆரம்பிக்க போவதில்லை. இடைநிறுத்தப்பட்ட இடத்தில் இருந்தே பணிகளை ஆரம்பிப்போம். சிறந்த நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவே செயற்படுவோம். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கு அமைய புதிய அரசியலமைப்பினை நிச்சயம் உருவாக்குவோம் என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷண நாணயக்கார தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நடைபெற்ற அமர்வின்போது புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-எதிர்க்கட்சிகளை கேட்டு எமது தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரிக்கவில்லை. அடிப்படை பிரச்னைகள் மற்றும் தேவைகளை கருத்திற் கொண்டு கொள்கைத் திட்டத்தை தயாரித்தோம். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நாங்கள் நிச்சயம் நிறைவேற்றுவோம். எமது கொள்கை திட்டத்தை ஐந்து ஆண்டுகளுக்கு வரையறுத்து தயாரித்தோமே தவிர, ஆறு மாதத்துக்குள் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதாக குறிப்பிடவில்லை.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெறுவதற்கு விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் ஊழல் மோசடி தடுக்கப்பட்டுள்ளது. நீதிமன்றம் உட்பட அரச நிறுவனங்கள் சுயாதீனப்படுத்தப்பட்டுள்ளது. பொலிஸ்மா அதிபர் தலைமறைவாகியுள்ளார். ஏனைய அரசாங்கங்களாயின் அவர் பாதுகாக்கப்பட்டிருப்பார். குற்றவாளிகளை பாதுகாக்க வேண்டிய தேவை எமக்கு கிடையாது.

சிறந்த நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவே நாங்கள் செயற்படுகிறோம். புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்கான பணிகளை உரிள காலத்தில் நாங்கள் முன்னெடுப்போம். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றுவோம்.

புதிய யாப்பு உருவாக்கத்துக்கான பணிகளை புதிதாக ஆரம்பிக்கப்போவதில்லை. இடைநிறுத்தப்பட்ட காலத்தில் இருந்தே ஆரம்பிப்போம். ஆகவே இவ்விடயத்தில் நாங்கள் அவசரப்படப் போவதில்லை-என்றார். (அ)

# அரசாங்க வைத்தியசாலைகளுக்கு கதிரியக்க சிகிச்சை உபகரணங்கள்

கொழும்பு, மார்ச் 19

அதிகவலு கதிரியக்க சக்தியுடன் கூடிய உயரிய தரத்துடன் கூடிய கதிரியக்க சிகிச்சை உபகரணங்கள் விநியோக கருத்திட்டத்தின் 2ஆம் ஆம் கட்டத்தை நடைமுறைப்படுத்த அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சரவைப் பேச்சாளர், அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இதனை தெரிவித்தார்.

புற்றுநோய் சிகிச்சை சேவைகளுக்குப் பயன்படுத்தப்படும் 14 நேர்கோட்டு ஆர்முடுக்கி இயந்திரங்களை 02 கட்டங்களின் கீழ் விநியோகிப்பதற்கு 2013 ஆம் ஆண்டில் ஐக்கிய இராச்சியத்தின் கம்பனிக்கும், சுகாதார அமைச்சுக்கும் இடையில் ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த கருத்திட்டத்தின் 1 ஆம் கட்டத்தின் கீழ் தேசிய புற்றுநோய் நிறுவகத்தின் 04 நேர்கோட்டு ஆர்முடுக்கி இயந்திரங்களும், கண்டி தேசிய வைத்தியசாலைக்கு 02 இயந்திரங்களும், காலி தேசிய வைத்தியசாலைக்கு 01 இயந்திரமும், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு 01 இயந்திரமும், யாழ்ப்பாணம் தெல்லிப்பளை தள வைத்தியசாலைக்கு 01 இயந்திரமுமாக மொத்தம் 09 இயந்திரங்கள் தற்போது அமைக்கப்பட்டுள்ளன.

இலங்கை புற்றுநோய் நிபுணத்துவ வைத்திய நிறுவகத்தால் சமர்ப்பிக்கப்படும் முன்மொழிவுகளை கருத்தில் கொண்டு, கருத்திட்டத்தின் 2ஆம் கட்டத்தின் கீழ் இரத்தினபுரி, பதுளை, அம்பாந்தோட்டை, அநுராதபுரம் மற்றும் குருநாகல் உள்ளிட்ட 05 வைத்தியசாலைகளுக்கு உயர் தொழிநுட்பத்துடன் கூடிய நேர்கோட்டு ஆர்முடுக்கி இயந்திரங்களை நிறுவுவதற்கும், குறித்த இயந்திரங்களை நிறுவுவதற்கு இயலுமாகும் வகையில் வைத்தியசாலையில் நிலத்தடி அரணை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள் வதற்கும் சுகாதார மற்றும் வெகு சன ஊடக அமைச்சர் சமர்ப்பித் துள்ள யோசனைக்கு அமைச்சரவை இவ்வாறு அனுமதி வழங்கியுள்ளது.

# விவசாயிகளுக்கு வழங்காமல் திருடப்பட்ட உர மானிய பணம்

## சபையில் பிரதி அமைச்சர் தகவல்

கொழும்பு, மார்ச் 19

அரசாங்கத்தால் வழங்கப்பட்ட உர மானியப் பணம் சில விவசாயிகளுக்கு கிடைக்கவில்லை எனவும், அந்தப் பணம் திருடப்பட்டுள்ளதாக தற்போது தெரியவந்துள்ளதாகவும் விவசாய பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சுசந்த குமார நவரத்னவினால் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போது, விவசாய பிரதி அமைச்சர் இதனை வெளிப்படுத்தினார்.

அனுராதபுரம் மாவட்டத்தில் மட்டும் 155 விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட உர மானியப் பணமான 2,934,310 ரூபாய் திருடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாக பிரதி அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

இந்த சம்பவம் தொடர் பாக ஒரு பெண் அதிகாரி இது வரை கைது செய்யப்பட்டுள்ளதாகவும் விவசாயப் பிரதி அமைச்சர் குறிப்பிட்டார்.

சில விவசாயிகளின் உர மானியப் பணம் மாயமாகியது தொடர்பாக இதுவரை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், அதுபற்றி மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் விவசாய பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன மேலும் தெரிவித்தார். (அ)

# 24 வருடங்களுக்கும் மேலாக கடனுக்குரிய வட்டியை செலுத்தாத முன்னாள் அமைச்சர்!

## சுசந்தகுமார எம்.பி. சபையில் தகவல்

கொழும்பு, மார்ச் 19

கமநல சேவை மத்திய நிலையத்தில் அமைந்துள்ள குழு சபைகள் ஊடாக முன்னாள் விவசாய அமைச்சர் எஸ். எம். சந்திரசேன 2001 ஆம் ஆண்டில் பெற்றுக் கொண்ட 1,275,000 தொகைக்கு இதுவரை வட்டி செலுத்தப்படவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் சுசந்த குமார நவரத்ன தெரிவித்துள்ளார்.

பாதீடு தொடர்பான விவசாயம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சின் குழுநிலை விவாதத்தின் போது பாராளுமன்ற உறுப்பினர் இதனைத் தெரிவித்தார்.

விவசாயி ஒருவருக்குக் கடன் வழங்கினால் அதை மிகக்குறுகிய காலத்தில் வசூலிக்கின்றனர்.

ஆனால் 24 வருடங்களுக்கு அதிகமான காலப்பகுதியில் 1,975,233 வட்டித் தொகை அமைச்சரிடமிருந்து இன்னும் வசூலிக்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டினார்.

அவ்வாறு வசூலிக்கப்பட வேண்டிய வட்டியை வசூலிக்க எவ்வளவு காலம் எடுக்கும் என விவசாயம் மற்றும் கால்நடைத் துறை பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்னவிடம் பாராளுமன்ற உறுப்பினர் கேள்வியெழுப்பினார்.

மொத்தத் தொகையையும் செலுத்துமாறு முன்னாள் அமைச்சருக்கு எழுத்துபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், அந்த தொகை நிச்சயமாக அறவிடப்படும் எனவும் பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன இதன் போது பதிலளித்தார். (அ)

# சுகாதார நிபுணர்கள் சங்கத்தின் வேலை நிறுத்தம் நியாயமற்றது!

## சுகாதார அமைச்சர் சபையில் காட்டம்

கொழும்பு, மார்ச்

நியாயமான அடிப்படைச் சம்பள உயர்வு வழங்கப்பட்ட போதிலும் சுகாதார நிபுணர்கள் சங்கத்தால் நேற்று வைத்தியசாலைகளில் நடத்தப்பட்ட வேலை நிறுத்தம் நியாயமற்றது என சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். நோயாளிகளின் உயிரைப் பணயமாக வைத்துக்கொண்டு நடத்தப்படும் இந்தப் போராட்டம் நியாயமற்றது என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதற்கிடையில், இந்த நியாயமற்ற வேலை நிறுத்தத்தில் இணையாமல் தங்கள் கடமைகளைச் செய்யும் அனைத்து சுகாதார நிபுணர்களும் பாதுகாக்கப்படவேண்டும் என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

தனது தொழில் எதிர்கொள்ளும் உண்மையான பிரச்னைகள் குறித்து விவாதிக்க எந்த நேரத்திலும் நேரத்தை வழங்க ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.

வரவு செலவுத் திட்டத்தின் மூலம் கொடுப்பனவுகள் குறைக்கப்பட்டதற்கு எதிராக, அரசாங்க துணை மருத்துவ நிபுணர்கள் சங்கம் நேற்று காலை 7.00 மணி முதல் 24 மணி நேர அடையாள வேலைநிறுத்தத்தை ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# விகாரைகள் புனரமைக்கப்படுவதுபோல் ஏனைய மத ஆலயங்களும் அபிவிருத்தி!

## அமைச்சர் ஹினிதும சுனில் செனவி



கொழும்பு, மார்ச் 19

"பூஜா பூமி" அபிவிருத்தி திட்டத்தின் கீழ் விகாரைகள் புனரமைக்கப்படுவதை போன்று இந்து ஆலயங்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள், இஸ்லாமிய பள்ளிகளை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என்று புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் சுற்றாடல் அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

அவர் மேலும் தெரிவிக்கையில்-புத்தசாசன மற்றும் சமய அமைச்சு பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளது. கிராமிய பௌத்த விகாரைகளின் அபிவிருத்திக்காக அவதானம் செலுத்தியுள்ளது. அதேபோன்று "பூஜா பூமி" திட்டத்தின் கீழ் விகாரைகளை போன்று இந்து ஆலயங்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள், இஸ்லாமிய பள்ளிகளை அபிவிருத்தி செய்வதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுப்போம்.

இதேவேளை எமது வேலைத்திட்டத்தின் கீழ் பிரிவெனா பாடசாலை தொடர்பிலும் விசேட அவதானம் செலுத்தியுள்ளோம். அதேபோன்று இந்து மதம் தொடர்பிலும் விசேட வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம். குறிப்பாக இந்து பிள்ளைகளுக்கான அறநெறி பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு இந்து கலாசார திணைக்களத்தின் ஊடாக அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆலயங்களின் அபிவிருத்திக்காக விசேட ஒதுக்கீடுகளை செய்யவுள்ளோம். அதன்படி இந்து கலாசார திணைக்களத்திற்கான ஒதுக்கீட்டை அதிகரித்துள்ளோம். மத தலங்கள் அனைத்தும் வேறுபாடின்றி அபிவிருத்தி செய்யப்படும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசபந்து தென்னக்கோனை தேட மேலும் நான்கு விசாரணைக் குழு!

## குற்றப்புலனாய்வு திணைக்களம் நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 19

**முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை தேடுவதற்காகக் குற்றப்புலனாய்வு திணைக்களம் மேலும் நான்கு விசாரணைக் குழுக்களை நியமித்துள்ளது.**

உடனடியாக கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமையாலேயே குற்றப்புலனாய்வு திணைக்களம் விசாரணைக் குழுக்களை நியமித்துள்ளது.

முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை கைது செய்வதற்காக இதுவரை அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் குழுக்களின் எண்ணிக்கை ஆறாக அதிகரித்துள்ளது.

நேற்று முன் தினம் முதல் இந்த நான்கு குழுக்கள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் தெரிவித்துள்ளது. தற்போது முன்னெடுக்கப்படும் விசாரணைக்கு மேலதிக மாக குறித்த குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

வெலிகம - பெலென பகுதியிலுள்ள விருந்தகம் ஒன்றுக்கு முன்பாக 2023 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் உள்ளிட்ட 8 பேரைக் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு மாத்தறை நீதவான் நீதிமன்றம் கடந்த பெப்ரவரி 27 ஆம் திகதி உத்தரவிட்டது. (அ)

# நுவரெலியா அஞ்சல் அலுவலகம் நவீனமயப்படுத்தப்படவுள்ளது!

கொழும்பு, மார்ச் 19

நுவரெலியா அஞ்சல் அலுவலகம் அஞ்சல் திணைக்களத்தால் நவீனமயப் படுத்தப்படவுள்ளதாக வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் பதிலளித்தார்.

சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய வகையில் நுவரெலியா அஞ்சல் அலுவலகம் மாற்றம் செய்யப்படும் என அமைச்சர் இதன் போது தெரிவித்தார்.

அதற்குத் தேவையான ஆலோசனைகள், தொழிநுட்ப ஒத்துழைப்பு ஆகியவற்றை நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் சுற்றுலா அதிகார சபை ஊடாக பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

நுவரெலியா அஞ்சல் அலுவலகத்தை அஞ்சலுக்குச் சொந்தமான நிறுவனமாக அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கப்படுவதாகவும் அமைச்சர் கூறினார்.

நுவரெலியா, கொழும்பு, காலி, கண்டி, உள்ளிட்ட பல அஞ்சல் அலுவலகங்கள் வரலாற்று ரீதியில் நோக்கும் போது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை என அமைச்சர் தெரிவித்தார். (அ)

# தெய்வம் தந்த வயிறு இது!

## சபையில் சாமர சம்பத்

கொழும்பு, மார்ச் 19

நானும், எனது வயிற்றை குறைப்பதற்காக நடக்கின்றேன். குறையவில்லை. அதற்காக நான் என்ன செய்வது, எனது வயிறு இங்குள்ளவர்களுக்கு பிரச்சினை என்றால், என்ன தான் செய்து.

இந்த வயிறு தெய்வம் தந்த வயிறு என்று பதுளை மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசாநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் சிறப்புரிமை பிரச்னையை நேற்று செவ்வாய்க்கிழமை எழுப்பிய அவர், மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னதாக சிறப்புரிமை பிரச்னையை முன்வைத்த எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க, சமீபத்தில் நடைபெற்ற கோப் குழுக் கூட்டத்தின்போது, தன்னை "பதுல்லே படா" என்று குறிப்பிட்ட கோப் உறுப்பினர் மீது நடவடிக்கை எடுக்குமாறு சபாநாயகரிடம் வலியுறுத்தினார்.

"பதுல்லே படா" என்று கோப் உறுப்பினர் குறிப்பிட்டது தெளிவாகத் தெரிகிறது. ஏனெனில் பதுளை மாவட்டத்தில் பெரிய வயிறு கொண்ட வேறு எந்த பாராளுமன்ற உறுப்பினரும் இல்லை. அமைச்சர் சமந்த வித்யாரத்ன உட்பட பதுளையில் உள்ள மற்றவர்களுக்கு வயிறு இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது," என்றும் சாமர சம்பத் தசநாயக்க கூறினார்.

"கோப் உறுப்பினர்களுக்கு நீங்கள் அறிவுரை வழங்க வேண்டும். கூட்டங்களின் போது எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென சொல் விக் கொடுக்க வேண்டும்," என்று அவர் மேலும் கூறினார். (அ)

# குஷ் போதைப்பொருளுடன் இந்திய தம்பதியர் சிக்கினர்!

கொழும்பு, மார்ச் 19

சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்ட 2 கோடியே 50 இலட்சம் ரூபா பெறுமதியான குஷ் போதைப்பொருளுடன் இந்திய தம்பதியர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவைச் சேர்ந்த 32 வயதுடைய கணவரும் 29 வயதுடைய மனைவியுமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் இருவரும் தாய்லாந்தின் பாங்கொக் நகரத்திலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.



இதன்போது, விமான நிலைய சுங்க அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர்கள் கொண்டு வந்த பயணப்பொதிகளில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 02 கிலோ 400 கிராம் குஷ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து சந்தேக நபர்கள் இருவரும் மேலதிக விசாரணைகளுக்காக விமான நிலைய பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ)

# கிராண்ட்பாஸ் துப்பாக்கிச்சூடு இரண்டு இளைஞர்கள் காயம்!

கொழும்பு, மார்ச் 19

கிராண்ட்பாஸ், நாகலகம் வீதி பகுதியில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இரண்டு இளைஞர்கள் காயமடைந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு நபர்களால் இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

துப்பாக்கிச் சூட்டால் காயமடைந்த இருவரும் சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்கள் 22 மற்றும் 28 வயதுடைய கிராண்ட்பாஸ், பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களின் நிலைமை பாரதூரமானதல்ல என வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த துப்பாக்கிச் சூட்டுக்கான காரணம் இதுவரை கண்டறியப்பட வில்லை எனவும், சந்தேக நபர்களை கைது செய்ய கிராண்ட்பாஸ், பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஈச்சம்பழம் வழங்க மறுத்த மௌலவி மீது தாக்குதல்!

கொழும்பு, மார்ச் 19

பள்ளிவாசலில் தொழுகையில் ஈடுபட்ட ஒருவர், தனக்கு ஈச்சம்பழம் வழங்க மறுத்ததால் கோபமடைந்து மௌலவியைத் தாக்கியதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

களுத்துறை, கட்டுகுருந்தவில் உள்ள மொஹிதீன் ஜும்மா பள்ளிவாசலில் மௌலவி மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஈச்சம்பழம் வழங்காமை தொடர்பில், சந்தேகநபர், மௌலவியுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாகவும், பின்னர் அவரை தாக்கியதாகவும் கூறப்படுகிறது.

தாக்குதலுக்கு உள்ளான மௌலவி களுத்துறையில் உள்ள நாகொட போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். (அ)

# அம்பாந்தோட்டை துறைமுகத்தில் குவிக்கப்பட்டுள்ள 400 வாகனங்கள்!

கொழும்பு, மார்ச் 19

நாட்டிற்குக் கொண்டு வரப்பட்ட சுமார் 400 வாகனங்கள் விடுவிக்கப்படாது தற்போது அம்பாந்தோட்டை துறைமுகத்தில் தேங்கியுள்ளதாக இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் சம்பத் மெரேஞ்சி இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

வாகன இறக்குமதியின் போது விதிக்கப்பட்ட தவறான நிபந்தனையே இதற்கான காரணம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஜனவரியில் ஒரு ட்ரில்லியன் ரூபா கடனாக பெற்ற அநுர அரசாங்கம்!

கொழும்பு, மார்ச் 19

அரசாங்கம் கடந்த ஜனவரி மாதம் மாத்திரம் ஒரு ட்ரில்லியன் ரூபாவை கடனாக பெற்றுள்ளது.

திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் மூலம் அரசாங்கம் இந்த கடனை பெற்றுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன.

அத்துடன் கடந்த பெப்ரவரி மாதத்தில் அரசாங்கம் 750 பில்லியன் ரூபாவை கடனாக பெற்றுள்ளது.

இந்த மாதத்தின் கடந்த 14 நாட்களில் அரசாங்கம் 580 பில்லியன் ரூபாவை கடனாக பெற்றுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

இதன்படி திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் மூலம் அரசாங்கம் இந்த வருடத்தில் இதுவரை 2.3 ட்ரில்லியன் ரூபாவினை கடனாக பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு மேயர் வேட்பாளர் எரான் விக்ரமரத்ன அல்லர்!

## கூறுகிறது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, மார்ச் 19

ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாநகர சபைக்கான மேயர் வேட்பாளர் எரான் விக்ரமரத்ன அல்ல என அக்கட்சியின் உறுப்பினர் நிரோஷன் பாதுக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-கொழும்பு மாநகர சபை மேயர் வேட்பாளராகக் களமிறக்குவதற்கு கட்சியின் சார்பில் மூன்று முக்கிய உறுப்பினர்களின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு பரிந்துரைக்கப்பட்டவர்களில் பொருத்தமான ஒருவர் தெரிவு செய்யப்படுவார்.

எரான் விக்ரமரத்ன கட்சியின் கொழும்பு மேயர் வேட்பாளராக போட்டியிடுவார் என ஹிருணிகா பிரேமச்சந்திர நினைத்திருக்கக் கூடும்.

ஆனால் அவ்வாறானதொரு தீர்மானம் எடுக்கப்படவில்லை. எரான் விக்கிரமரத்னவுக்கு ஐக்கிய மக்கள் சக்தியில் மிக முக்கியமான பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான இறுதி முடிவு விரைவில் எடுக்கப்பட்டு சரியான நேரத்தில் அறிவிக்கப்படும்-என்றார். (அ)

# முன்னாள் ஜனாதிபதி ரணிலை கைது செய்வது சாத்தியமற்றது!

## கூறுகிறார் உதய கம்மன்பில

கொழும்பு, மார்ச் 19

**பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையின் அடிப்படையில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை கைது செய்வதோ அல்லது அவரது குடியுரிமையை இரத்து செய்வதோ சாத்தியமற்றது என பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துரைக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-பட்டலந்த ஆணைக்குழுவின் அறிக்கையின் 3ஆவது அத்தியாயத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் கிளர்ச்சிகள் குறித்துப் பேசுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் இந்த அறிக்கையை அமைச்சரவை அனுமதி ஊடாக ஏற்றுக்கொள்ளுமானால் மக்கள் விடுதலை முன்னணியின் கிளர்ச்சி இடம்பெற்றுள்ளது என்பதனை ஏற்பதாகும்.

இந்த அறிக்கை பாராளுமன்றத்திலும் முன்வைக்கப்பட்டுள்ளது.



அப்போதைய அமைச்சர் விஜயபால மெண்டிஸ் 2001 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29 ஆம் திகதி பட்டலந்த அறிக்கையைச் சபையில் முன்வைத்தார்.

அவ்வாறு இல்லை எனப் பொய் கூறும் அரசாங்க தரப்பினர் 2001 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29 ஆம் திகதி ஹன்சாட்டின் ஆயிரத்து 581 ஆவது பக்கத்தைப் பார்ப்பார்களானால் அதற்கான சாட்சியினை பெறமுடியும்.

ஆகவே, பட்டலந்த ஆணைக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை கைது செய்யவோ அல்லது குடியுரிமையை இரத்து செய்யவோ முடியாது.

1948 ஆம் ஆண்டு விசாரணை ஆணைக்குழுவின் சட்டத்தின் கீழ் இந்த ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

1977 ஆம் ஆண்டு விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்படும் ஆணைக்குழுவுக்கே நீதிமன்ற அதிகாரம் காணப்படுகிறது.

இந்த ஆணைக்குழுவால் நபரொருவர் குற்றமிழைத்தாரா? இல்லையா? என்பதனை தீர்மானிக்க முடியும்.

அவ்வாறு எனில், திசைகாட்டியின் பொய் பிரசாரத்தில் புதிதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் குடியுரிமையை இரத்து செய்யும் நடவடிக்கையும் இணைந்துள்ளது-என்றார். (அ)

கணேமுல்ல சஞ்சீவ கொலை

# கைதாகிய சிறைச்சாலை அதிகாரிக்கு விளக்கமறியல்!

கொழும்பு, மார்ச் 19

பாதாள உலக கும்பலைச் சேர்ந்த கணேமுல்ல சஞ்சீவ என அழைக்கப்படும் சஞ்சீவ குமார சமரத்ன என்பவர் கொழும்பு புதுக்கடை நீதிமன்றத்துக்குள் வைத்து கடந்த பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் சிறைச்சாலை அதிகாரி ஒருவர் கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினரால் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சிறைச்சாலை அதிகாரி வாக்குமூலம் வழங்குவதற்காக கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவுக்கு சென்றிருந்தபோதே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

காலி அக்மீமன பிரதேசத்தில் வசிக்கும் 48 வயதுடைய பூஸா சிறைச்சாலையின் அதிகாரி ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சிறைச்சாலை அதிகாரி சம்பவத்தன்று, கணேமுல்ல சஞ்சீவவை கொழும்பு புதுக்கடை நீதிமன்றத்துக்கு சிறைச்சாலை பஸ்ஸில் அழைத்துச் சென்ற சிறைச் சாலை அதிகாரிகளை திருப்பி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. இதனையடுத்து, சந்தேக நபரான சிறைச்சாலை அதிகாரி கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில்

ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். கணேமுல்ல சஞ்சீவ படுகொலை தொடர்பில் இதுவரை 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர். (அ)

# இலஞ்சம் பெற்ற மதிப்பீட்டு அதிகாரி கைது!

கொழும்பு, மார்ச் 19

குருநாகல் - பௌத்தாலோக பகுதியில் 50,000 ரூபாய் கையூட்டல் பெற்ற மதிப்பீட்டு அதிகாரி ஒருவர் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குருநாகல் - பௌத்தாலோக பகுதியைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.முறைப்பாட்டாளரின் பெயரில் பதிவு செய்யப்பட்ட காணி உறுதி தொடர்பான பத்திரத்துக்கு அரசாங்கத்துக்கு செலுத்தவேண்டிய முத்திரைத் தொகையை குறைப்பதற்காக இந்த இலஞ்சப் பணத்தை கேட்டுள்ளார். (அ)

# மியன்மாரில் இருந்து 14 இலங்கையர் மீட்பு!




கொழும்பு, மார்ச் 19

மியன்மார் மற்றும் தாய்லாந்தில் உள்ள இலங்கைத் தூதரகங்களுடன் ஒருங்கிணைந்து, மியன்மார் மற்றும் தாய்லாந்து அரசாங்கங்களின் ஆதரவுடன், வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு, மியன்மாரின் மியாவடியில் உள்ள இணையக் குற்றவியல் மையங்களில் கடத்தப்பட்டு, வலுக்கட்டாயமாக பணியமர்த்தப்பட்ட 14 இலங்கையர்களை வெற்றிகரமாக மீட்டுள்ளது.

மீட்கப்பட்ட 14 இலங்கையர்களும், 2025 மார்ச் 18 ஆம் திகதி இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2024, பெப்ரவரி 3 அன்று மியன்மாரின் துணைப் பிரதமரும் மத்திய வெளியுறவு அமைச்சருமான யூ தான் ஸ்வே யுடனும், 2025, பெப்ரவரி 13 அன்று தாய்லாந்தின் வெளியுறவு அமைச்சர் மெரிஸ் செங்கியம்பொங்ஸாவுடனும் இடம்பெற்ற வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் விஜித ஹேரத்துடனான தொலைபேசியில் உரையாடல்கள் உட்பட, இலங்கை மேற்கொண்ட தொடர்ச்சியான இராஜதந்திர முயற்சிகளை அடுத்து இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இரண்டு சந்திப்புகளிலும், கடத்தப்பட்ட இலங்கையர்களை மீட்டு தாயகத்துக்குத் திருப்பி அனுப்புவதற்கு உடனடி உதவியானது தேவைப்படுகின்றது என்பதை அமைச்சர் ஹேரத் வலியுறுத்தினார்.

கடத்தப்பட்ட இலங்கையர்களை மீட்டு, பாதுகாப்பாகத் திருப்பி அனுப்புவதில் மியன்மார் மற்றும் தாய்லாந்து அரசாங்கங்கள் அளித்த அளப்பரிய உதவிக்கு வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துள்ளது. (அ)

# மேல் மாகாணப் பொலிஸ் அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடினார் ஜனாதிபதி!

கொழும்பு, மார்ச் 19

திட்டமிடப்பட்ட குற்றச் செயல்கள் மற்றும் போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிப்பதற்குத் தேவையான வசதிகளை வழங்கவும் புதிய சட்டங்களை தயாரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.




மேல் மாகாண பொலிஸ் உயர் அதிகாரிகளுடன் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி அநுரகுமார இவ்வாறு தெரிவித்தார்.

இதில் சட்டத்தின் ஆட்சியை பாதுகாக்கும் பொலிஸ் திணைக்களத்தின் பொறுப்பு என்றும் ஜனாதிபதி தெரிவித்திருந்ததுடன் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டாமல் இலங்கையில் ஒரு நேர்மையான சமூகத்தை உருவாக்க முடியாது என்று ஜனாதிபதி அநுரகுமார தெரிவித்தார்.

இதில் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால, பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர் சட்டத்தரணி சுனில் வட்டகல, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன, பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய மற்றும் மேல் மாகாண பொலிஸ் பிரதானிகள் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸாரின் அடாவடியைக் கண்டித்து நகரசபை ஊழியர்கள் நேற்று போராட்டம்



திருகோணமலை, மார்ச்.19

**பொலிஸாரின் அடாவடி செயல்பாடுகளைக் கண்டித்து திருகோணமலை நகர சபை ஊழியர்கள் நேற்றுக்காலை போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

கிளீன் சிறீலங்கா வேலைத் திட்டத்தின் போதான வீதி மற்றும் வடிகான் துப்புரவுப் பணிகளின்போது பொதுமக்களுக்கும் நகர சபை ஊழியர்களுக்கும் இடையில் ஏற்பட்ட தகராறின் போது பொலிஸாரால் நகர சபை ஊழியர்கள் சிலர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத் தப்பட்டதனை காண்டித்து நேற்றுக் காலை முதல் பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டது.

வீதி துப்புரவுப் பணிகளின் போது ஏற்பட்ட தகராறானது அன்றையதினமே சுமூகமான பேச்சுவார்த்தைகளின் மூலமாக தீர்க்கப்பட்டிருந்த நிலையில் குறித்த விடயம் தொடர்பில் விசாரணை நிமிர்த்தம் நகர சபை ஊழியர்கள் பொலிஸ் நிலையத்துக்கு வரவழைக்கப்பட்டு கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸாரின் இந்த நடவடிக்கையை கண்டிக்கும் முகமாக திருகோணமலை நகர சபை ஊழியர்கள் நேற்றுக் காலை முதல் அடையாள பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்த நிலையில் அவர்களது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை நகர சபை செயலாளரிடம் கையளித்த பின்னர் மீண்டும் கடமைக்குத் திரும்பினர்.

(எ)




மேன்முறையீட்டு நீதிமன்ற

# நீதியரசராக பதவியுயர்வு பெற்ற பிரேம்சங்கருக்கு கௌரவிப்பு

திருகோணமலை, மார்ச்.19

திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேம்சங்கர், ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவால் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக பதவி உயர்வு பெற்றதை அடுத்து திருகோணமலை மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தினரால் கௌரவிக்கப்பட்டார்.

குறித்த நிகழ்வு கடந்த 15 ஆம் திகதி சனிக்கிழமை திருகோணமலையில் நடைபெற்றது.

இந்த கௌரவிப்பு நிகழ்வில் ஜனாதிபதி சட்டத்தரணிகளான எம். ஏ. சுமந்திரன், ஏ. டபிள்யூ அப்துல் சத்தார் உட்பட சட்டத்தரணிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(எ)



# சுவாமி நடராஜானந்தரின் 58ஆவது சிரார்த்த தினம்

காரைதீவு, மார்ச்.19

இராமகிருஷ்ணமிசன் துறவி சுவாமி நடராஜானந்தா ஜீ மஹராஜின் 58ஆவது சிரார்த்த தின வைபவம் அம்பாறை மாவட்டம் காரைதீவு பிரதேச செயலக முன்றலில் அடிகளாரது திருவுருவச்சிலையடியில் நேற்றுக் காலை நடைபெற்றது. சுவாமி நடராஜானந்த நூற்றாண்டு விழாச் சபையின் செயலாளர் வி. ரி. சகாதேவராஜா தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

(எ-07)

# மூதூரில் கிராமத்துக்குள் நுழைந்து காட்டு யானைகள் அட்டகாசம்!

திருகோணமலை, மார்ச்.19

மூதூர் -வீரமாநகர் கிராமத்துக்குள் நேற்று முன்தினம் நள்ளிரவு நுழைந்த காட்டு யானைகள் பெரும் சேதங்களை ஏற்படுத்தியுள்ளதாக கிராம மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வீடொன்றை உடைத்து காட்டு யானைகள் சேதம் விளைவித்துள்ளதோடு அந்த வீட்டிலிருந்த நெல் மூடையை வெளியில் இழுத்து உண்டுள்ளது.

அத்தோடு, வாழை மரங்களையும் காட்டு யானைகள் சேதப்படுத்தியுள்ளன. காட்டு யானைகளின் அட்டகாசத்தால் இரவு வேளையில் வீடுகளில் உறங்க முடியாதுள்ளதோடு, சிறுவர்களை வீட்டில் வைத்திருப்பதும் அச்சமாக உள்ளதாகவும் மக்கள் தெரிவித்தனர்.



வீடுகளை காட்டு யானைகள் உடைத்ததால் இருப்பதற்கு இடமில்லையெனவும் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுத்து உதவிகளை வழங்க வேண்டும் வேண்டும் எனவும் மூதூர் -வீரமாநகர் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(எ)

# தாதியர்கள் போராட்டம்; நோயாளிகள் கடும் அவதி

திருகோணமலை, மார்ச்.19

கிண்ணியா தள மருத்துவமனையில் கடமையாற்றும் தாதியர்கள் நேற்று முன்தினம் 3 மணி நேரம் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். அதேவேளை, மதிய உணவு இடைவேளை நேரத்தில் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

காலை 10 மணி முதல் ஆரம்பமான இவர்களின் பணிப் புறக்கணிப்பு, நண்பகல் ஒரு மணி வரை நீடித்தது.

இதனால், அவசர சிகிச்சைப் பிரிவு தவிர்ந்த, ஏனைய அனைத்துப் பிரிவுகளும் தமது அன்றாட செயல்பாட்டை இழந்தன.

மருத்துவமனையின் வெளி நோயாளர் பிரிவுக்கு சிகிச்சைக்காக வந்த நோயாளிகளும் பெரும் சிரமங்களை எதிர் கொண்டனர்.

2025 வரவு - செலவுத் திட்டத்தில் தாதியர் சேவைக்கு இழைக்கப்பட்ட அநீதி சரிசெய்யப்படாததால், இவ்வாறான பணிப் புறக்கணிப்புக்கு தாங்கள் தள்ளப்பட்டுள்ளதாக தாதியர்கள் தெரிவித்தனர்.

மேலும், ஒப்புக்கொண்டபடி தாதியர் சேவையில் பதவி உயர்வு பிரச்னை குறித்து எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை எனவும், மேலதிக நேரக் கொடுப்பனவுகள், விடுமுறை தின கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை.

இதனால், தாதியர்கள் கடும் அதிருப்தியடைந்துள்ளனர் எனவும் கூறினர்.

(எ)

# சுகாதார சேவையினர் திடீர் வேலைநிறுத்தம்

திருகோணமலை, மார்ச்.19

2025 வரவு - செலவுத் திட்டத்தில் தமது கோரிக்கை நிறைவேற்றப்படாமையால் 19 சுகாதார தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து நேற்று அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்தன.

அந்த வகையில், இதற்கு ஆதரவு வழங்கும் வகையில் திருகோணமலை மூதூர் வைத்திய அதிகாரி பணிமனையில் கடமையாற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள் நேற்று அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதனால், மூதூர் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பொதுச்சுகாதார மருத்துவ மாதுக்கள் அலுவலகங்கள் மூடப்பட்டன. இதனால்,

சுகாதார சேவைகளைப் பெறுவதற்கு பெரும் கஷ்டங்களுக்கு மத்தியில் வந்தாலும் சேவை பெறாது திரும்பிச் செல்ல வேண்டியுள்ளதாக மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

(எ)

# "ஊழல் என்கின்ற போர்வையில் அரசியல் பழிவாங்கலில் அரசு"

மூதூர், மார்ச்.19

ஜனாதிபதித் தேர்தலிலும் பாராளுமன்றத் தேர்தலிலும் தேசிய மக்கள் சக்தி அதிகாரத்துக்கு வருவதற்கு முன்னர் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாது ஊழல் என்கின்ற போர்வையில் கடந்த கால அரசாங்கத் தலைவர்களை பழிவாங்க நினைக்கிறார்கள் என ஐக்கிய தேசிய கட்சியின் மூதூர் தொகுதி அமைப்பாளரும் முன்னாள் பிரதியமைச்சருமான அப்துல்லா மஹ்ரூப் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக கட்டுப்பணத்தை நேற்று முன்தினம் மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தில் செலுத்தியதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

"தேசிய மக்கள் சக்தி மீது மக்கள் அதிருப்தியில் உள்ளனர். மக்கள் எதிர்பார்த்த விடயங்களைச் செய்யாதிருப்பது மேலும் எதிர்ப்பை அதிகரித்துள்ளது.

இன்று பெரும்பான்மை சமூகத்துக்கு வாக்குகளை வழங்கிய முஸ்லிம் சமூகம் ஏமாற்றப்பட்டுள்ளது.

அமைச்சரவையில் முஸ்லிம்கள் இல்லை. கிளீன் சிறீலங்கா திட்டத்தில் 18 பெரும்பான்மை சமூகத்தை சேர்ந்தவர்கள் இருக்கின்ற போதிலும் முஸ்லிம் சமூகத்தை சேர்ந்தவர்கள் எவரும் இல்லை.

தற்போது முஸ்லிம்களின் ஷரீஆ - பர்தா விவகாரங்களில் அமைச்சர் சாவித்திரி போல்ராஜ் உட்பட பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த அமைச்சர்களும் புரியாதபடி பேசுகிறார்கள். கல்முனையில் பயங்கரவாத - அடிப்படை வாத கொள்கை என்கின்ற விடயங்கள் முஸ்லிம் சமூகத்தை மாத்திரமல்ல ஒட்டு மொத்த சமூகத்தையும் அச்சத்துக்கு உள்ளாக்கியுள்ளது.

இந்தத் தேர்தல் ஜனாதிபதியை அல்லது பிரதமரை, பாராளுமன்ற உறுப்பினரை தெரிவு செய்வதற்கான தேர்தல் அல்ல. முஸ்லிம் சமூகத்தை மாற்றியமைக்கும் தேர்தலாக பார்க்கப்படுகிறது.

எனவே, தேசிய மக்கள் சக்திக்கு பதிலடி கொடுக்கும் தேர்தலாக இதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்"- என்றார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸாமீது இஸ்ரேல் மீண்டும் தாக்குதல்!

## குழந்தைகள் உட்பட 100 பேர் உயிரிழப்பு



காஸா, மார்ச்.19

**காஸா மீது இஸ்ரேல் நடத்திய மூர்க்கத்தனமான தாக்குதலில் குழந்தைகள், பெண்கள் உட்பட 100 பேர் உயிரிழந்தனர்.**

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே கடந்த ஜனவரி 19ஆம் திகதி போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலுக்குவந்த நிலையில் நடந்த மிகப்பெரிய தாக்குதலாக இது அமைந்துள்ளது.

இந்தத் தாக்குதல் குறித்து இஸ்ரேல் பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "பணயக் கைதிகளை விடுவிப்பதில் ஹமாஸ் தொடர்ச்சியாக தாமதம் காட்டி வருகிறது. அதே போன்று, இவ்விவகாரத்தில் அமெரிக்க ஜனாதிபதியின் தூதுவர் மற்றும் பிற மத்தியஸ்தர்களின் ஆலோசனைகளையும் தொடர்ந்து புறக்கணித்து வருகிறது. இதையடுத்து காஸா மீது தாக்குதலைத் தொடங்கியுள்ளோம். இந்த நிமிடம் முதல் ஹமாஸுக்கு எதிரான இராணுவ பலம் படிப்படியாக அதிகரிக்கப்படும்"என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், நேற்று அதிகாலை மத்திய காஸாவில் டேர்-அல்-பாலா எனும் இடத்தில் இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்தியுள்ளது. இதில், மூன்று குடியிருப்புகள் தரைமட்டமாகின. இதேபோன்று, கான் யூனிஸ், ராபாவிலும் இத்தாக்குதல் நீண்டுள்ளது. இத்தாக்குதல்களில் குழந்தைகள், பெண்கள் உட்பட 100இற்கும் அதிகமானோர் உயிரிழந்தனர் என்று சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன. (எ)

# இத்தாலியில் வெள்ளப்பெருக்கு

ரோம், மார்ச்.19

இத்தாலியின் வடக்குப் பகுதியில் பெய்த கனமழையால் வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

ஐரோப்பிய நாடான இத்தாலியில் உருவான புதிய புயலால் கனமழை பெய்யும் என அந்த நாட்டின் வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்திருந்தது. இதன்படி டஸ்கனி, எமிலியா ஆகிய பிராந்தியங்களில் கடந்த சில தினங்களாக கனமழை கொட்டித் தீர்த்தது. இதனால், ஆர்னோ ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. பல்வேறு இடங்கள் வெள்ளக்காடாக மாறின. வீதிகளில் சென்ற கார்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. போலோக்னா நகரில் பயங்கர நிலச்சரிவும் ஏற்பட்டது.

வெள்ள அபாயம் உள்ள பகுதியில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறும்படி எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

டஸ்கனி பிராந்தியத்தில் 60இற்கும் மேற்பட்ட நகரங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பாடசாலைகள் மூடப்பட்டன. எனவே அங்கு வசிக்கும் மக்கள் தேவையின்றி வீட்டை விட்டு வெளியே செல்ல வேண்டாம் எனவும் அரசாங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. வெள்ளத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட பகுதியில் மீட்பு படையினர் மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (எ)

# முதல் குற்றவாளி ஸ்டாலின்தான்!

சென்னை,மார்ச்.19

டாஸ்மாக் கடைகளில் (அரசு மதுக்கடை) தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் படத்தை ஒட்டுவோம் என்றும் இனி தமிழகத்தில் பொலிஸ் துறையை தூங்க விடமாட்டோம். டாஸ்மாக் விவகாரத்தில் முதல் குற்றவாளி ஸ்டாலின்தான் என்றும் பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

இந்தியாவின் தமிழகத்தில் டாஸ்மாக் முறைகேட்டை கண்டித்து சென்னையில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்திய பா.ஜ.கவினரை கைது செய்த பொலிஸார், 10இற்கும் மேற்பட்ட மண்டபங்களில் அடைத்தனர். இந்த நிலையில், மாலை 6 மணி கடந்தும் விடுவிக்காததால், பொலிஸாருடன் பா.ஜ.கவினர் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். சாலிகிராமத்தில் பா.ஜ.க. பெண் நிர்வாகி மயங்கி விழுந்த நிலையில் அவரை தமிழிசை தனது காரில் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். இதேபோன்று, அண்ணாமலையும் பொலிஸாருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். பின்னர் இரவு 7 மணிக்கு பிறகு பா.ஜ.கவினர் அனைவரும் விடுவிக்கப்பட்டனர். (எ)

# உக்ரைன் ஆயுத படைகளின் புதிய தலைவர் நியமனம்

## ஜனாதிபதி ஜெலன்ஸ்கி அறிவிப்பு

கீவ், மார்ச்.19

உக்ரைன் ஆயுதப் படைகளின் புதிய தலைவராக ஆண்ட்ரி நேட்டோவை ஜனாதிபதி ஜெலன்ஸ்கி நேற்று நியமித்துள்ளார்.

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையே 2022ஆம் ஆண்டு பெப்ரவரி 24ஆம் திகதி போர் மூண்டது. நேட்டோவில் இணையும் உக்ரைனின் முடிவுக்கு எதிராக ஆரம்பித்த இந்தப் போரில், அந்த நாட்டின் கீவ், கார்கிவ், டொனெட்ஸ்க் உள்ளிட்ட பல நகரங்களை ரஷ்யா தொடக்கத்தில் கைப்பற்றியது. எனினும், அவற்றை உக்ரைன் பதிலடி கொடுத்து பின்னர் மீட்டது.

போரானது 3 ஆண்டுகளை கடந்துள்ளது.

இந்த நிலையில், உக்ரைன் ஆயுத படைகளின் புதிய தலைவராக ஆண்ட்ரி நேட்டோவை ஜனாதிபதி ஜெலன்ஸ்கி நியமித்துள்ளார். அனாடலி பார்ஹைஹலெவிச் கடந்த 2024ஆம் ஆண்டு பெப்ரவரி முதல் இந்த பதவியை வகித்து வந்த நிலையில், இந்த மாற்றம் பற்றிய அறிவிப்பு வெளியாகியுள்ளது.

போர் திறனை மேம்படுத்தும் வகையில், ஆயுதப் படைகளை நாங்கள் திட்டமிட்ட முறையில் உருமாற்றியுள்ளோம் என இதுபற்றி பாதுகாப்பு அமைச்சர் ருஸ்டெம் உமரோவ் தெரிவித்தார். (எ)

# கத்தோலிக்க திருச்சபையை சீர்திருத்த 3 வருட திட்டம்!

## பாப்பரசர் அனுமதி வழங்கினார்

வத்திக்கான், மார்ச்.19

கத்தோலிக்க திருச்சபையை சீர்திருத்தும் மூன்று வருட திட்டத்துக்கு பாப்பரசர் பிரான்சிஸ் அனுமதி வழங்கியுள்ளார். இதேவேளை, உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ள போதிலும் தனது பதவியில் தொடர்வதற்கான விருப்பத்தையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

பாப்பரசர் பிரான்சிஸ் ஜெமெலி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் கத்தோலிக்க திருச்சபையை சீர்திருத்தும் திட்டங்களுக்கு அனுமதி வழங்கும் ஆவணத்தில் கைச்சாத்திட்டார் என வத்திக்கான் தெரிவித்துள்ளது.

கத்தோலிக்க திருச்சபையில் பெண்களுக்கு அதிக பங்களிப்பை வழங்குவது, ஆட்சி மற்றும் தீர்மானம் எடுப்பதில் பாமர மக்களை அதிகளவில் சேர்ப்பது உட்பட பல சீர்திருத்தங்கள் குறித்து கத்தோலிக்க திருச்சபை ஆராயவுள்ளது.

இந்தச் சீர்திருத்தங்களை ஆயர்கள் பேரவை என்ற அமைப்பு ஆராயும். பரிசுத்த பாப்பரசர் தனது பதவிக்காலத்தில் பணி நிகழ்ச்சி நிரலை இந்தக் குழு மூலமே முன்னெடுத்து வருவார்.

இதேவேளை, பாப்பரசர் பிரான்சிஸ் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் அவரது படத்தை முதல்தடவையாக வத்திக்கான் தேவாலயம் வெளியிட்டுள்ளது.

மருத்துவமனையில் உள்ள தேவாலயத்தில் பாப்பரசர் திருப்பலியை நிறைவேற்றினார் எனவும் வத்திக்கான் தெரிவித்துள்ளது. (எ)

# சிரியாவில் இஸ்ரேல் வான்வழி தாக்குதல்

## இருவர் பலி; 19 பேர் காயம்

டெல் அவிவ், மார்ச்.19

சிரியாவில் இஸ்ரேல் விமானப் படை நடத்திய வான்வழித் தாக்குதலில் இருவர் பலியாகினர். 19 பேர் காயமடைந்துள்ளனர்.

அங்கு பஷார் அல்-ஆஷாத் தலைமையிலான அரசுக்கு எதிராக கிளர்ச்சியாளர்கள் போரில் ஈடுபட்டனர். பல இடங்களை கைப்பற்றி முன்னேறினர். இதனால், இரண்டு தசாப்தங்களாக ஆட்சி செய்து வந்த அல்-ஆஷாத் நாட்டை விட்டு தப்பியோடினார்.

இந்த நிலையில், அந்த நாட்டில் உள்ள பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டு மையங்கள், நிலைகள், ஆயுத கிடங்குகளை இலக்காக கொண்டு இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. இதன்படி, சிரியாவின் தெற்கே தேரா மாகாணத்தில் நேற்று முன்தினம் இஸ்ரேல் இராணுவம் வான்வழித் தாக்குதல் நடத்தியது.

சிரியாவில் இராணுவ நிலைகளை இலக்காக கொண்டு இஸ்ரேல் இராணுவம் நடத்தி வரும் இந்தத் தாக்குதலில், சிரியாவின் ஆயுத குவியல்கள் மற்றும் இராணுவ வாகனங்கள் உள்ள இராணுவத் தளங்கள் இலக்காக கொள்ளப்பட்டுள்ளன.

இதுபற்றி சிரியாவின் மனித உரிமைகள் கண்காணிப்பகம் வெளியிட்டு உள்ள செய்தியில், 2 ஏவுகணைகள் தாக்குதலில் ஈடுபட்டன. இதில், பொதுமக்களில் ஒருவர் பலியானார் எனத் தெரிவித்துள்ளது.

தேரா மாகாணத்தில் இஸ்ரேல் தாக்குதல் நடத்துவது இது முதல்முறையல்ல. இதற்கு முன்பும் இராணுவ கிடங்குகள் மீது இதேபோன்ற தாக்குதல்களை நடத்தியுள்ளது.

சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸில் இந்த வார தொடக்கத்தில், பலஸ்தீனிய இஸ்லாமிக் ஜிகாத் அமைப்பின் கட்டுப்பாட்டு மையம் மீது இஸ்ரேல் விமானப் படை தாக்குதல் நடத்தியது. (எ)

# ரூ.1365 கோடி வரி செலுத்திய அயோத்தி இராமர் கோவில்

புதுடில்லி, மார்ச்.19




இந்தியாவில் உள்ள அயோத்தி இராமர் கோவில் அறக்கட்டளை சார்பில் கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் அரசுக்கு இலங்கை மதிப்பில் 1,365 கோடி ரூபாய் வரி செலுத்தப்பட்டுள்ளது.

உத்தர பிரதேசம், அயோத்தியில் இராமர் கோவில் கட்டலாம் என்று கடந்த 2019ஆம் ஆண்டு நவம்பரில் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இந்த நிலையில், 2020ஆம் ஆண்டு ஒகஸ்ட் 5ஆம் திகதி பிரதமர் நரேந்திர மோடி, அயோத்தியில் இராமர் கோவில் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார். கடந்த 2024ஆம் ஆண்டு ஜனவரி 22ஆம் திகதி இராமர் கோவில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இதன்பிறகு இராமர் கோவிலில் நாள்தோறும் இலட்சக்கணக்கான பக்தர்கள் குவிந்து வருகின்றனர். இதனால் அரசுக்கு வருமானம் அதிகரித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 விக்கெட் வித்தியாசத்தில் நியூசிலாந்து அபார வெற்றி



வெலிங்டன், மார்ச்.19

பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது ரி - 20 போட்டியில் நியூசிலாந்து 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் விளையாடி வருகிறது. இதில், நடைபெற்ற முதல் போட்டியில் நியூசிலாந்து வெற்றி பெற்றது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2ஆவது போட்டி நேற்று நடைபெற்றது. மழை காரணமாக இந்த போட்டி 15 ஓவர்களாக குறைக்கப்பட்டது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் நிர்ணயிக்கப்பட்ட 15 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்களை இழந்து 135 ஓட்டங்கள் அடித்தது. அதிகபட்சமாக அணித் தலைவர் சல்மான் ஆஹா 46 ஓட்டங்கள் எடுத்தார். நியூசிலாந்து தரப்பில் ஜேக்கப் டபி, பென் சீயர்ஸ், நீஷம் மற்றும் இஷ் சோதி ஆகியோர் தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர்.

இதனையடுத்து 136 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய நியூசிலாந்து அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக ரிம் சீபர்ட் - பின் ஆலன் களமிறங்கினர். இந்த இன்னிங்ஸின் முதல் ஓவரை ஷஹீன் ஷா அப்ரிடி ஓட்டம் எதுவும் விட்டுக் கொடுக்காமல் வீசினார். ஆனால், 2ஆவது ஓவரில் பின் ஆலன் 3 சிக்ஸர்கள் அடித்து அசத்தினார்.

பின்னர் 3ஆவது ஓவரை வீசிய ஷஹீன் ஷா அப்ரிடியின் பந்துவீச்சை வெளுத்து வாங்கிய ரிம் சீபர்ட் அந்த ஓவரில் மட்டும் 4 சிக்ஸர்கள் உட்பட 26 ஓட்டங்கள் குவித்தார்.

இருவரும் இணைந்து முதல் விக்கெட்டுக்கு 66 ஓட்டங்கள் இணைப்பாட்டம் அமைத்த நிலையில் ரிம் சீபர்ட் (45 ஓட்டங்கள்) ஆட்டமிழந்தார். பின் ஆலன் 38 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இவர்களின் வலுவான தொடக்கத்தால் எந்த வித சிக்கலுமின்றி இலக்கை நோக்கி முன்னேறிய நியூசிலாந்து 13.1 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 137 ஓட்டங்கள் அடித்து எளிதில் வெற்றி பெற்றது. பின்வரிசையில் மிச்செல் ஹே 21 ஓட்டங்கள் அடித்து அணியின் வெற்றியை உறுதி செய்தார். பாகிஸ்தான் தரப்பில் ஹாரிஸ் ரவூப் 2 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் நியூசிலாந்து 2-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது. (எ)

# பாக். கிரிக்கெட் சபைக்கு 2,524 கோடி ரூபாய் நஷ்டம்

புதுடில்லி, மார்ச்.19

ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடர் சமீபத்தில் பாகிஸ்தானில் நடைபெற்றது. இந்தத் தொடரை நடத்துவதற்காக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை லாகூர், கராச்சி, ராவல்பிண்டி ஆகிய 3 மைதானங்களின் சீரமைப்புப் பணிக்காக இலங்கை மதிப்பில் சுமார் 2,524 கோடி ரூபாயை செலவிட்டிருந்தது. இது ஏற்கனவே மதிப்பிட்ட தொகையைவிட 50 சதவீதம் அதிகரித்திருந்தது.

தொடர்ந்து போட்டிகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளுக்கு என ஒட்டுமொத்தமாக இலங்கை மதிப்பில் 2,969 கோடி ரூபாயை பாகிஸ்தான் கிரிக்கெட் சபைமுதலீடு செய்தது.

ஆனால், இதுவரை பாகிஸ்தான் போட் டியில் பங்கேற்றதற்கு கட்டணமாக 177 கோடி (இலங்கை) ரூபாய் மட்டுமே திரும்பி வந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நுழைவுச் சீட்டு விற்பனை, அனுச ரணை வாயிலாகவும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு பெரியளவில் வருமானம் கிடைக்கவில்லை. ஒட்டு மொத்தமாக ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடரை நடத்தியதில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை 2,524 கோடி ரூபாய் நஷ்டம் அடைந்துள்ளது.

இதனால், உள்ளூர் போட்டிகளில் விளையாடும் வீரர்களுக்கான ஊதியத்தை 90 சதவீதம் குறைத்துள்ளது பாகிஸ்தான் கிரிக்கெட் சபை.

மேலும், தங்குமிடம், பயணக்கட்டணம் ஆகியவற்றில் கெடுபிடிகளை காட்டி வருகிறது. முன்னர் 5 நட்சத்திர ஹோட்டல்களில் தங்க வைக்கப்பட்ட வீரர்கள் தற்போது சாதாரண வசதி கொண்ட ஹோட்டல்களில் தங்கியுள்ளனர். (எ)

# பாகிஸ்தான் செல்லும் பங்களாதேஷ் அணி

டாக்கா, மார்ச்.19

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி மே மாதம் பாகிஸ்தானுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு மூன்று ரி - 20 மற்றும் மூன்று ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது.

இந்தத் தொடர் பைசலாபாத், முல்தான், லாகூர் ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளன.

இதற்கு முன்னர் கடந்த வருடம் பாகிஸ்தான் சென்று இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்களாதேஷ் விளையாடியது. இந்த இரண்டு போட்டிகளிலும் பங்களாதேஷ் அணி வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது. (எ)

# ஓர் ஓவரில் 6 சிக்ஸர்கள் அடித்து திசர அசத்தல்!

உதய்பூர், மார்ச்.19




இலங்கையின் முன்னாள் சகல துறை கிரிக்கெட் வீரர் திசர பெரேரா, தொழில் முறை கிரிக்கெட் போட்டிகளில் இரண்டாவது தடவையாக ஒரே ஓவரில் ஆறு சிக்ஸர்கள் அடித்து வரலாறு படைத்துள்ளார்.

இந்தியாவின் உதய்பூர், மிராஜ் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஆசிய லெஜண்ட்ஸ் லீக் கிரிக்கெட் போட்டியிலேயே இந்த வரலாற்றுச் சாதனையை 36 வயதை நெருங்கிக் கொண்டிருக்கும் திசர பெரேரா நிகழ்த்தினார்.

ஆப்கானிஸ்தான் பத்தன்ஸ் அணிக்கு எதிராக நடைபெற்ற போட்டியின் கடைசி ஓவரில் 6 சிக்ஸர்கள் குவித்த சிறீலங்கன் லயன்ஸ் அணித் தலைவர் திசர பேரேரா, தொழில்முறை கிரிக்கெட் போட்டிகளில் இரண்டு தடவைகள் ஒரே ஓவரில் 6 சிக்ஸர்கள் குவித்த முதலாவது வீரரானார்.

சகலவிதமான கிரிக்கெட் போட்டிகளிலும் இதுவரை 15 வீரர்கள் ஒரே ஓவரில் 6 சிக்ஸர்கள் குவித்துள்ளனர். ஆப்கானிஸ்தான் பத்தன்ஸ் அணிக்கு எதிரான நீக்கல் போட்டியில் 19ஆவது ஓவர் நிறைவில் 72 ஓட்டங்களைப் பெற்றிருந்த திசர பேரேரா கடைசி ஓவரில் அயான் கானை எதிர்கொண்டார். 3 அகல பந்துகள் உட்பட அயான் கான் வீசிய அந்த ஓவரில் திசர பெரேரா 6 சிக்ஸர்களை விளாசி 108 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். 36 பந்துகளை எதிர்கொண்ட அவர் 13 சிக்ஸர்களையும் 2 பௌண்ட்ரிகளையும் விளாசியிருந்தார்.

மறுபக்கத்தில் மெவான் பெர்னாண்டோ 56 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 81 ஓட்டங்களைப் பெற்றார். இவர்கள் இருவரும் பிரிக்கப்படாத 4ஆவது விக்கெட்டில் 155 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

இந்தப் போட்டியில் சிறீ லங்கன் லயன்ஸ் அணி 20 ஓவர்களில் 3 விக்கெட்களை இழந்து 230 ஓட்டங்களைக் குவித்தது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் பத்தன்ஸ் 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்த 204 ஓட்டங்களைப் பெற்று தோல்வி யடைந்தது.

திசர பெரேரா இதற்கு முன்னர் பிரதான கழகங்களுக்கு இடையிலான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டி ஒன்றில் இராணுவ அணிக்காக விளையாடியபோது புளூம்பீல்ட் கிரிக்கெட் அணிக்கு எதிராக 2021இல் ஒரே ஓவரில் 6 சிக்ஸர்களை விளாசியிருந்தார். (எ)

மகளிர் ரி - 20 கிரிக்கெட்

# நியூசிலாந்து - இலங்கை 3ஆவது போட்டி இரத்து

வெலிங்டன், மார்ச்.19


நியூசிலாந்து - இலங்கை இடையிலான 3ஆவது ரி-20 போட்டி மழை காரணமாக இரத்துச் செய்யப்பட்டது.

நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி, அந்த நாட்டு மகளிர் அணிக்கெதிராக தலா 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் ரி - 20 தொடர்களில் விளையாடியது. இதில், முதலில் நடைபெற்ற ஒருநாள் தொடரை நியூசிலாந்து 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது. இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கும் இடையே ரி - 20 தொடர் நடைபெற்றது.


இதில், முதல் ஆட்டத்தில் இலங்கையும், 2ஆவது ஆட்டத்தில் நியூசிலாந்தும் வெற்றி பெற்று தொடரில் 1-1 என்ற கணக்கில் சமனில் இருந்தன.

இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது போட்டி நேற்று நடைபெற்றது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து 14.1 ஓவர்களில் 3 விக்கெட்களை இழந்து 101 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது மழை குறுக்கிட்டது. இதனால், ஆட்டம் பாதியில் நிறுத்தப்பட்டது. ஜார்ஜியா பிம்மர் 46 ஓட்டங்களுடனும், இஸ்ஸி ஷார்ப் 17 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். மழை நீண்ட நேரமாகியும் நிற்காததால் ஆட்டம் அத்துடன் இரத்துச் செய்யப்பட்டது.

இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட ரி -20 தொடர் 1-1 என்ற கணக்கில் சமனில் முடிந்தது. (எ)



# டில்லி துணைத் தலைவராக டு பிளெஸ்ஸிஸ் நியமனம்



புதுடில்லி, மார்ச்.19

டில்லி கப்பிட்டல்ஸ் அணியின் துணைத் தலைவராக டு பிளெஸ்ஸிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐ.பி.எல். 18ஆவது சீசன் எதிர்வரும் 22ஆம் திகதி தொடங்குகிறது. இதில், டில்லி அணியின் தலைவராக அக்சர் பட்டேல், கடந்த வாரம் நியமிக்கப்பட்டிருந்தார். இதைத் தொடர்ந்து தற்போது துணைத் தலைவராக தென்னாபிரிக்காவின் டு பிளெஸ்ஸிஸ் நியமிக்கப்பட்டுள்ளார். 40 வயதான டு பிளெஸ்ஸிஸ் கடந்த சீசனில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு(ஆர். சி. பி.) அணிக்காக விளையாடினார்.

ஆனால், கடந்த ஆண்டு நடைபெற்ற ஏலத்துக்கு முன்னதாக அந்த அணி அவரை விடுவித்தது. இதைத் தொடர்ந்து நடைபெற்ற ஏலத்தில் டில்லி அணி டு பிளெஸ்ஸியை இலங்கை மதிப்பில் 6.8 கோடி ரூபாய்க்கு ஏலம் எடுத்திருந்தது. கடந்த ஆண்டு பிளே ஒப் சுற்று வரை முன்னேறியிருந்த டில்லி அணி இந்த சீசனில் தனது முதல் ஆட்டத்தில் வரும் 24ஆம் திகதி லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸுடன் மோதுகிறது.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடுப்பிட்டியில்...

சடலம் மீட்கப்பட்டது. இறந்தவர் யார் என அடையாளம் காணப்பட வில்லை.

சடலத்துக்கு உரியவர் இரு நாட்களுக்கு முன்னர் உயிரிழந்திருக்கலாம் என்றும் சுமார் 60 வயது மதிக்கத்தக்கவர் எனவும் கூறப்படுகின்றது.

கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வே. பாஸ்கரன் சடலத்தை பார்வையிட்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். இதையடுத்து, நேற்றிரவு சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. (ஐ-02)

## சட்ட...

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என்று அல் ஜசீரா நேர்காணலில் தெரிவித்திருந்தார். எனவே, அது செல்லுபடியாகாது என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

எனவேதான், மும்மொழிகளிலும் அந்த அறிக்கையை நாம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறோம். பட்டலந்த வீடமைப்பு திட்டம், சட்ட விரோதமாக தடுத்து வைத்தல் பிரதேசம் மற்றும் வதை முகாம் தொடர்பான ஆணைக் குழுவின் அறிக்கை சகல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையிலுள்ள காரணிகள் தொடர்பில் மேலும் ஆழமாக மதிப்பாய்வு செய்து பரிந்துரைகளை வழங்குவதற்காக குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது. மேலும் இவ்வறிக்கை சட்டமா அதிபருக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளது. ஜனாதிபதியால் நியமிக்கப்படவுள்ள குழுவின் பரிந்துரைகள் மற்றும் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்று அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

எனவே, பட்டலந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கையை அரசாங்கம் தீர்மானிக்கப் போவதில்லை. மாறாக சட்ட அமுலாக்க நிறுவனங்களே அதனைத் தீர்மானிக்கும்" - என்று நேற்றைய தினம் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் மாநாட்டில் அமைச்சர் தெரிவித்தார். (ஐ)

## ஈஸ்டர்...

நேரிடும்.

அந்த சமூகத்துடன் தொடர்புடையவர்களுக்கு அது பெரும் கவலையை அளிக்கும். அந்த வகையிலேயே கத்தோலிக்க மக்கள் கொல்லப்பட்டமை தொடர்பில் பேராரயரின் அதிருப்தியும் கவலையும் ஏற்றுக் கொள்ளக்கூடியவை யாகும். அரசாங்கம் என்ற ரீதியில் எமக்கும் அதற்கான பொறுப்பு காணப்படுகிறது.

எனவே, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்த விசாரணைகளின் முன்னேற்றத்தைக் கூறுவதைவிட, அதன் அடிப்படையில் எடுக்கப்படவுள்ள சட்ட நடவடிக்கைகள் என்ன என்பதை விரைவில் அனைவராலும் அறிந்துகொள்ள முடியும்.

கொலையாளிகளே இதனைப் பயன்படுத்திக் கொண்டு ஆட்சி அதிகாரத்தைக் கொண்டு சாட்சிகளை அழித்த சூழலிலேயே நாம் ஆட்சியமைத் திருக்கின்றோம்.

எனவே, மீண்டும் அவற்றை முன்னெடுப்பது இலகுவான விடயமல்ல. எவ்வாறிருப்பினும் இந்த கொடூர சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் நிச்சயம் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் - என்றார்.

கடந்த சனிக்கிழமை நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற கர்தினால் மல்கம் ரஞ்சித், "அரசாங்கம் வாக்குறுதியளித்தபடி எதிர்வரும் - ஆறாவது உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நினைவு தினத்துக்குள் குற்றவாளிகளை தண்டிக்க வேண்டும். அவ்வாறு இல்லையேல் நாம் வீதிக்கு இறங்கி போராட நேரிடும்", என்று எச்சரித்திருந்ததை நினைவுகூரத்தக்கது. (ஐ)

## தையிட்டி...

தொல்பொருள் சின்னங்களை பாதுகாக்க வேண்டும் - என்று அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சானக சம்பத் மதுகொட கூறியுள்ளார்.

மேலும், யாழ்ப்பாணம் திஸ்ஸ விகாரை 1956ஆம் ஆண்டு நகர திட்ட வரைபடத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த விகாரையை அண்மித்த பகுதியிலுள்ளவர்கள் போலியான ஆவணங்களை பயன்படுத்தி போராட்டங்களில் ஈடுபடுகிறார்கள்.

திஸ்ஸ விகாரை பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு அரசாங்கம் விசேட குழுவை அமைக்க வேண்டும். இந்த விகாரையை அண்மித்த பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் குடியிருப்பவர்களை அகற்ற வேண்டும். ஆகவே, இந்த பிரச்னைக்கு முரண்பாடற்ற வகையில் தீர்வு காணவேண்டும்.

முல்லைத்தீவு குருந்தூர் மலையிலும் இதே பிரச்னை காணப்படுகிறது. நீதிமன்ற உத்தரவால் ஆராய்ச்சி பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இவ்வாறான செயல்பாடுகள் பௌத்த மத தொல்பொருள் சின்னங்கள் அழிவடைவதற்கு காரணியாக அமையும்.

வடக்கில் உள்ள அரசியல்வாதிகள் பௌத்த விகாரை மற்றும் தொல்பொருள் சின்னங்களை பிரச்னைக்குரிய தாக்கி அதனூடாக அரசியல் செய்கிறார்கள் என்றும் அவர் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில் தெரிவித்தார். (ஐ)

## அர்ச்சுனா...

ஒன்றுக்கு பதிலளித்தபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

பாராளுமன்றத்தின் கண்ணியத்தைப் பாதுகாக்கவும் பாராளுமன்ற சிறப்புரிமைகளுக்கு பின்னால் ஒளிந்து கொண்டு அர்ச்சுனா எம். பி., இனவெறி அறிக்கைகளை வெளியிடுவதைத் தடுக்கவும் சபாநாயகர் சில நடவடிக்கைகளை எடுப்பார் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார். (ஐ)

## கோட்டாபயவின்...

அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது என்று தெரிவித்த நீதியரசர்கள் எஸ். துரைராஜா, ஏ. எச். எம். டி. நவாஸ், மகிந்த சமயவர்த்தன ஆகியோர் அடங்கிய அமர்வு அந்தப் பெண்ணுக்கு ஒரு இலட்சம் ரூபாயை இழப்பீடாக வழங்குமாறும் உத்தரவிட்டுள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் பேலியகொடை சிறப்பு விசாரணை பிரிவால் கைது செய்யப்பட்ட ஹேனகம, பொகுனுவிட்ட பிரதேசத்தில் வசிக்கும் காஞ்சன பிரியதர்ஷனி மதுரப்பெரும என்ற பெண் சமர்ப்பித்த அடிப்படை உரிமைகள் மீறல் மனுவை தாக்கல் செய்திருந்தார்.

2020ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட மனுதாரருக்கு தடுப்புக் காவல் அடுத்தடுத்து இரண்டு தனித்தனி உத்தரவுகள் மூலம் பிறப்பிக்கப்பட்டன. 1929ஆம் ஆண்டின் 17ஆம் எண் விஷம் மற்றும் ஆபத்தான மருந்துகள் கட்டளை சட்டத்தின் கீழ் 2020 ஜனவரி 30ஆம் திகதி அன்று முதல் உத்தரவும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் 2020 பெப்ரவரி 06ஆம் திகதி அடுத்த உத்தரவும் வெளியிடப்பட்டது.

அரசமைப்பின் 20ஆவது திருத்தம் நடைமுறைக்கு வராததால் இந்த விண்ணப்பத்தை தாக்கல் செய்யும் போது அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்பு அமைச்சராக செயல்பட எந்த அதிகாரமும் இல்லை என்பது தெரிய வந்தது. இதன் அடிப்படையில், அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 2020 பெப்ரவரி 6ஆம் திகதி பிறப்பிக்கப்பட்ட தடுப்புக் காவல் உத்தரவு அரசமைப்பை மீறுவதாகும் - அதற்கு எந்த சட்ட செல்லுபடியும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# 29 வீத பாடசாலை மாணவர்கள் கல்வியை இடைநிறுத்தியுள்ளனர்

கொழும்பு, மார்ச் 19

நாட்டில் 35 இலட்சம் இளம் தலைமுறையினர் உள்ளனர். இவர்களில் 29 சதவீதத்தினர் - 10 இலட்சத்து 15 ஆயிரம் பேர் கல்வியை இடைநிறுத்தியுள்ளனர்.

2024 உலகளாவிய பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட மாணவர் சுகாதார ஆய்வறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின்படி 35 இலட்சம் இளம் தலைமுறையினரில் 71 வீதமானோரே பாடசாலைக்கு செல்கின்றனர்.

கடந்த வருடம் 40 அரச பாடசாலைகளில் தரம் 08 முதல் 12 வரையிலான 3 ஆயிரத்து 843 மாணவர்களை இணைத்து இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மாணவர்களில் 17.7 வீதமானோர் ஆரோக்கியமற்ற பானங்களை அருந்துவதுடன் இவர்களில் பெரும்பாலானோர் ஆண் மாணவர்கள் என தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் 28 வீத மாணவர்கள் நாளாந்தம் சீனி கலந்த பானங்களை அருந்துவதுடன் 28.5 வீத மாணவர்கள் உப்பு கலந்த சிற்றுண்டிகளை பெற்றுக் கொள்கின்றமையும் கண்டறியப்பட்டுள்ளது.

இதனைத் தவிர 29.3 வீதமானோர் அதிக எண்ணெய் கலந்த உணவை பெற்றுக் கொள்வதுடன் 40.9 வீத மாணவர்கள் நாளாந்தம் அதிக சீனி கலந்த உணவுகளை உட்கொள்கின்றனர்.

ஆண், பெண் மற்றும் வயதுக்கமைய ஒரு சிகரெட் அல்லது இரண்டு சிகரெட்க்களை பயன்படுத்திய அல்லது பயன்படுத்த முயற்சித்த மாணவர்களின் எண்ணிக்கை 12.8 வீதமாக பதிவாகியுள்ளது.

இந்த சுகாதார ஆய்வறிக்கையானது சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக பிரதியமைச்சர் டொக்டர் ஹன்சக விஜயமுனி தலைமையில் சர்வதேச பிரதிநிதிகளின் பங்குபற்றலுடன் வெளியிடப்பட்டுள்ளது. (ஐ)

## 19சுகாதார...

முன்னெடுக்கப்படும் என்று அந்தச் சங்கங்கள் அறிவித்துள்ளன.

சுகாதார தொழிற்சங்கங்களின் சம்மேளனத்தின் பிரதிநிதிகளான சமன் ரத்னபிரிய, ரவி குமுதேஷ் ஆகியோர் நேற்று முன்தினம் நிதி அமைச்சின் அதிகாரிகளுடன் கலந்துரையாடினர். இதில், தீர்வு எட்டப்படாத நிலையில் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக தொழிற்சங்கங்கள் தெரிவித்தன.

வரவு - செலவு திட்டத்தால் ஏற்பட்ட அநீதிக்கு அதிகாரிகளிடம் சரியான பதில்கள் இல்லை, மேலதிக நேரக் கொடுப்பனவுகள் குறைக்கப்பட்டுள்ளமை, அரச விடுமுறை கொடுப்பனவுகள் குறைக்கப்பட்டுள்ளமை, பதவி உயர்வுகள் குறைக்கப்பட்டுள்ளமை, சலுகைகள் தொடர்பாக எவ்வித பதில்களும் கிடைக்காமை உள்ளிட்ட பல்வேறு காரணங்களை முன்வைத்து இந்த வேலைநிறுத்தம் முன்னெடுக்கப்படுகின்றது.

இதேநேரம், நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்ட சுகாதார தொழிற்சங்கங்களின் வேலை நிறுத்தத்தால் ஆயிரக்கணக்கான நோயாளர்கள் சிரமங்களுக்கு உள்ளாகினர். (ஐ)

## பால்மா...

விலை அதிகரிப்பு செய்யப்படவுள்ளது.

இதன்படி, 400 கிராம் பால்மா பைக்கெற்றின் விலை 50 ரூபாயாலும் ஒரு கிலோ பால்மா பைக்கெற்றின் விலை 145 ரூபாயாலும் அதிகரிக்கப்படவுள்ளது. (ஐ)

## தென்னக்கோன்...

சஞ்சீவவின் படுகொலையுடன் தொடர்புடைய செவ்வந்தி மற்றும் பிரசன்ன ரணவீர உள்ளிட்ட மேலும் பலர் தேடப்படுகின்றனர்.

இவர்களை கைது செய்வதற்கென்று விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. விரைவில் இவர்கள் கைது செய்யப்படுவார்கள்.

கணேமுல்லை சஞ்சீவ படுகொலை வழக்கில் இதுவரை 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். வழக்கு தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. பொலிஸ் அதிகாரிகளும் இதில் அடங்குவர்.

இலங்கை பொலிஸ் துறை தங்களின் பணியை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது. இந்த விவகாரங்கள் தொடர்பில் உங்களுக்கேதும் மேலதிக தகவல்கள் தெரிந்தால் அதனை எமக்கு அறியப்படுத்தலாம் என குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## கோட்டாபயவுக்கான...

உத்தரவிட்டது.

காணாமல் ஆக்கப்பட்ட லலித், குகன் ஆகியோரின் உறவினர்கள் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனு நேற்றைய தினம் சோபித ராஜகருணா, சம்பத் விஜயரத்ன ஆகியோர் அடங்கிய அமர்வு முன்னர் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

2011ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் யாழ்ப்பாணம் நகரில் நடைபெறவிருந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டத்தை ஒழுங்கமைப்பதில் ஈடுபட்டிருந்த லலித்குமார் வீரராஜ், குகன் முருகானந்தன் ஆகியோர் ஆவரங்காலில் வைத்து காணாமல் ஆக்கப்பட்டனர்.

இதுதொடர்பாக அவர்களின் உறவினர்களால் ஆள்கொணர்வு மனு 2012ஆம் ஆண்டு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு மீதான விசாரணையின் போது, இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட சாட்சிகளை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றுக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனையடுத்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் 2012ஆம் ஆண்டு செப்ரெம்பர் 19ஆம் திகதி விசாரணைகள் ஆரம்பமாகின. ஜே. வி. பியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித்குமார, குகன் முருகானந்தனின் மனைவி, லலித் குமார் வீரராஜின் தந்தையார் ஆகியோர் ஆரம்பத்தில் சாட்சியமளித்திருந்தனர். தொடர்ந்து முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உள்ளிட்ட சிலர் சாட்சியமளித்திருந்தனர்.

இதையடுத்து முன்னாள் பாதுகாப்பு செயலாளரான கோட்டாபய ராஜபக்ஷவை சாட்சியமளிக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனால், அவர் மன்றில் முற்படவில்லை.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையாவதைத் தடுத்து கட்டளையிடுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் விதித்த அழைப்பாணையை இரத்து செய்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# அதானியுடன் தொடர்ந்தும் பேசுகிறது இலங்கை அரசு!

## புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்கள் குறித்து

புதுடில்லி, மார்ச் 19

**இலங்கையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்கள் குறித்து அதானி நிறுவனம் தொடர்ந்து கலந்துரையாடி வருவதாக த ஹிந்து செய்தித்தாள் செய்தி வெளியிட்டுள்ளது.**

இந்தத் திட்டங்கள் தொடர்பாக அதானி நிறுவனத்துக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையே தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருவதாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தத் திட்டங்களுக்கான கட்டணங்கள் தொடர்பாகப் பரஸ்பர உடன்பாட்டை எட்டுவதற்குப் பொருத்தமான கலந்துரையாடல்கள் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னாரில் புதுப்பிக்கத்தக்க காற்றாலை மின்னாலை அமைக்கும் திட்டத்திலிருந்து, கட்டணப் பிரச்சினை காரணமாக விலகுவதாக அதானி நிறுவனம் அண்மையில் எழுத்துப்பூர்வமான அறிவிப்பொன்றை வழங்கியது.

இருப்பினும், இந்த திட்டத்தை முழுமையாக நிறுத்த எந்த தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்று த ஹிந்து செய்தித்தாள் சுட்டிக்காட்டியுள்ளது.

கட்டணங்கள் குறித்து பரஸ்பர உடன்பாட்டை எட்டிய பின்னர், ஜூன் மாதத்துக்குள் இந்தத் திட்டத்தின் பணிகள் மீண்டும் தொடங்கப்படலாம் என்று அந்த செய்தித்தாள் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கிடையில், குறித்த செயற்திட்டம் தொடர்பில் அதானி நிறுவனத்துடன் தொடர்ந்தும் கலந்துரையாடல் நடத்தப்படும் என இலங்கை அரசாங்கம் அண்மையில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## அத்தியாவசிய பொருட்கள் சிலவற்றின் விலை மாற்றம்!

கொழும்பு, மார்ச் 19

லங்கா சதொச நிறுவனத்தினால் பொது மக்களுக்கு வழங்கப்படும் பல அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

அதன்படி, சிவப்பு சீனி ஒரு கிலோ கிராமின் விலை 8 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 277 ரூபாய் ஆகும்.

சிவப்பு பருப்பு ஒரு கிலோ கிராமின் விலை 4 ரூபாவால் குறைக்கப்பட்டு, அதன் புதிய விலை 279 ரூபாய் ஆகும்.

கோதுமை மா ஒரு கிலோ கிராமின் விலை 2 ரூபாவால் குறைக்கப்பட்டு, அதன் புதிய விலை 162 ரூபாய் ஆகும்.

ரின் மீன் ஒன்றின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டு, அதன் புதிய விலை 490 ரூபாய் ஆகும்.

உருளைக்கிழங்கு ஒரு கிலோ கிராமின் விலை 13 ரூபாவால் குறைக்கப்பட்டு, அதன் புதிய விலை 185 ரூபாவாக பதிவாகியுள்ளது.

வெள்ளை கௌப்பி ஒரு கிலோ கிராமின் விலை 45 ரூபாவால் குறைக்கப்பட்டு, அதன் புதிய விலை 750 ரூபாய் ஆகும்.

இதேவேளை ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காயத்தின் விலை 25 ரூபாவால் குறைக்கப்பட்டு, அதன் புதிய விலை 160 ரூபாய் ஆகும்.

ஒரு கிலோ கிராம் வெள்ளைப்பூண்டின் விலை 20 ரூபாவால் குறைக்கப்பட்டு, அதன் புதிய விலை 575 ரூபாவாக பதிவாகியுள்ளது. (அ)

## புதிய அரசமைப்பு உருவாக்கத்தை அரசாங்கம் புறக்கணிப்பது கவலை!

### சபையில் அஜித் பி பெரேரா

கொழும்பு, மார்ச் 19

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தை இரண்டாம் பட்சமாக்குவது அல்லது புறக்கணிப்பது கவலைக்குரியது. யாப்புருவாக்க பணிகளை துரிதப்படுத்த வேண்டும். இதற்கு பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளை உள்ளடக்கிய வகையில் "அரசியல் யாப்பு வரைவு உருவாக்க சபை" ஒன்றை அமைக்க வேண்டும். இதற்குரிய வளங்களை அரசாங்கம் வழங்க வேண்டும். பணிகளை ஒருவருட காலத்துக்குள் நிறைவு படுத்த வேண்டும். இவ்விடயத்தில் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் நடைபெற்ற அமர்வின் போது புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் சபை ஒத்திவைப்பு பிரேரணையை முன்வைத்து உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-புதிய அரசியல் கலாசாரத்துக்காக நிறைவேற்றுத்துறை அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை இரத்துச் செய்து, பாராளுமன்ற அரசாட்சி முறைமையை மீண்டும் உருவாக்குவதும், நிறைவேற்றுத்துறை அதிகாரமில்லாத ஜனாதிபதி முறைமையை அறிமுகப்படுத்தாகவும், புதிய பாராளுமன்றத் தேர்தல் முறைமையை அறிமுகப்படுத்தும் வகையில் புதிய அரசியலமைப்பினை உருவாக்குவதாக தேசிய மக்கள் சக்தி மக்களுக்கு வாக்குறுதியளித்தது.

மக்கள் வாக்கெடுப்புடன் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டது. பிரதான எதிர்க்கட்சியாகிய நாங்கள் புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்கான அவசியம் தொடர்பில் ஜனாதிபதி தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் குறிப்பிட்டோம். அதே நிலைப்பாட்டில் இன்றும் உள்ளோம். எமது நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமுமில்லை.

இந்த நாட்டின் புதிய அரசியல் கலாச்சாரத்தை ஏற்றுக்கொள்வதுடன், பல தேவைகளுக்காக பலமுறை திருத்தம் செய்யப்பட்ட அரசியலமைப்புக்கு பதிலாக நடைமுறைக்கு சாத்தியமான வகையில் புதிய அரசியலமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்பதை நாட்டு மக்களில் பெரும்பாலானோர் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். இதுவே சிறந்த சூழல்,வாய்ப்பு, பெரும்பான்மை பலம் அரசாங்கத்துக்கும் உண்டு. சிறந்த வரைவுக்கு நாங்களும் முழுமையாக ஒத்துழைப்பு வழங்குவோம்-என்றார். (அ)

## இவ்வருடத்தில் இதுவரை 25 துப்பாக்கிச் சூடுகள்!

கொழும்பு, மார்ச் 19

இந்த வருடத்தின் இதுவரை 25 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அதில் 16 சம்பவங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டவை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த 25 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களினால் இதுவரை 11 பேர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் பலர் காயமடைந்ததாக பொலிஸார் மேலும் கூறினர். (அ)

## முப்படையில் இருந்து தப்பிய 1246 பேர் கைது

கொழும்பு, மார்ச் 19

முப்படையிலிருந்து சட்டபூர்வமாக இராஜினாமா செய்யாமல் தப்பிச் சென்ற 1246 பேர் கடந்த 21 நாட்களுக்குள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி, கடந்த 21 நாட்களுக்குள் முப்படைகள் மற்றும் பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கைகளில் இவ்வாறு 1246 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவத்திலிருந்து தப்பியோடிய நபர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகளின்போது இராணுவ சேவையில் ஈடுபட்டிருந்த மூன்று அதிகாரிகளும் கைது செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, முப்படையினரால் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் 950 இராணுவ சிப்பாய்கள், 45 கடற்படை சிப்பாய்கள் மற்றும் 102 விமானப் படை சிப்பாய்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை பொலிஸார் நடத்திய சோதனை நடவடிக்கைகளில், இராணுவத்தைச் சேர்ந்த 114 பேர், கடற்படையைச் சேர்ந்த 19 பேர் மற்றும் விமானப்படையைச் சேர்ந்த 13 பேர் உட்பட 146 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

## அதானி திட்டத்துக்கு எதிரான மனுக்கள் மீளப்பெறப்பட்டன!

கொழும்பு, மார்ச் 19

மன்னார், விடத்தல்தீவு பகுதியில் இந்திய அதானி நிறுவனத்துடன் காற்றாலை மின் நிலையத்தை நிர்மாணிப்பதற்கு மேற்கொண்ட தீர்மானத்தை இரத்து செய்யக்கோரித் தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் உயர் நீதிமன்றத்திலிருந்து நேற்று மீளப்பெறப்பட்டன.

சட்டமா அதிபர் நீதிமன்றத்தில் சீராக்கல் மனுவொன்றை சமர்ப்பித்து, குறித்த திட்டம் மீளப் பெறப்படுவதாக இந்திய அதானி நிறுவனம் இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவருக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளதாகத் தெரிவித்திருந்தார்.

அந்த அறிவிப்புக்குப் பின்னர், மனுதாரர்கள் குறித்த அடிப்படை உரிமை மனுக்களை மீளப் பெற்றனர்.

இதேவேளை, சுற்றாடல் நீதிக்கான கேந்திர நிலையம் உள்ளிட்ட 5 தரப்பினரால் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பதவி துறந்தார் இம்தியாஸ்!

கொழும்பு, மார்ச் 19

ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் இம்தியாஸ் பக்கீர் மார்க்கர் தனது தவிசாளர் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.



தனது இராஜினாமா கடிதத்தை கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். "தவிசாளர் பதவியிலிருந்து விலகினாலும், ஐக்கிய மக்கள் சக்தியில் தொடர்ந்து பயணிப்பேன்" என்றும் அவர் கூறியுள்ளார். (அ)

# ஆனந்த விஜேபாலவின் எம்.பி. பதவிக்கு எதிரான மனுவின் தீர்ப்பு மே 5ஆம் திகதி

கொழும்பு, மார்ச் 19

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்து செய்ய உத்தரவிடக்கோரித் தாக்கல் செய்யப்பட்ட மனுவுக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டுள்ள முதல்நிலை எதிரீடு தொடர்பான தீர்ப்பு மே மாதம் 5 ஆம் திகதி அறிவிக்கப்படும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இந்த மனு இன்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவர் லபார் தாஹிர் மற்றும் கே. பி. பெர்னான்டோ ஆகிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் ஆயத்தின் முன்னிலையில் அழைக்கப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பில் உரிய எழுத்து மூல சமர்ப்பிப்புகளைச் சமர்ப்பிக்க நீதியரசர்கள் ஆயம் அனைத்து தரப்பினருக்கும் ஒருவாரம் கால அவகாசம் வழங்கியுள்ளது.

இந்த மனு தொடர முடியாது எனச் சட்டமா அதிபர் உட்படப் பிரதிவாதிகளால் எழுப்பப்பட்ட முதல்நிலை எதிரீடு தொடர்பான தீர்ப்பு மே மாதம் 5 ஆம் திகதி அறிவிப்பதற்கு நீதியரசர்கள் ஆயம் தீர்மானித்தது. பொதுஜன பெரமுனவின் நிர்வாக செயலாளர் ரேணுகா பெரேராவால் இந்த மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால பாராளுமன்ற உறுப்பினராகவும், ஜனாதிபதி செயலணி தலைவராகவும் செயற்பட்டு வருவதாகத் தகவல் கிடைக்கப் பெற்றுள்ளதாக மனுதாரர் கூறியுள்ளார்.

ஜனாதிபதி செயலணியின் தலைவர் பதவி அரச பதவி எனச் சுட்டிக்காட்டிய மனுதாரர், பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வகித்துக் கொண்டு அவ்வாறான ஒரு பதவி வகிப்பதற்கு அரசியலமைப்பின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் பதவி வகிப்பதற்குப் பொருத்தமில்லை எனக் குற்றம் சுமத்தியுள்ளார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினால் 19.03.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org